உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 25 வெள்ளிக்கிழமை (11-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:318

# தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வுக்கு கிளிநொச்சியில் 50 ஆயிரம் பேர் திரண்டனர்

கொழும்பு,ஒக்.11

விடுதலைப் புலிகளின் முதல் பெண் போராளி 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளான நேற்று தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் கிளிநொச்சியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் புலிகளின் பிரமுகர்கள் பலர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 3.20 மணியளவில் கரடிப்போக்குச் சந்தியிலிருந்து பதினொரு மகளிர் படையணிகள் கிளிநொச்சி மத்திய விளையாட்டுத்திடலை நோக்கி இராணுவ அணிவகுப்பாகப் புறப்பட்டன. பிற்பகல் 4.40 மணியளவில் விளையாட்டுத்திடலை வந்தடைந்த படையணிகள், அங்கு 2ஆம் லெப்டினன்ட் மாலதிக்கு தமது இராணுவ மரியாதையைச் செலுத்தின.

☛ படங்கள் 2ஆம் பக்கத்தில்

மகளிர் படையணிகளின் இராணுவ மரியாதையை படையணிகளின் தளபதிகள் ஏற்றனர்.

மாலதி மகளிர் படையணி, சிறுத்தைப் படையணி, குட்டிசிறி மோட்டார் படையணி, சோதியா படையணி,

(13ஆம் பக்கம் பார்க்க)

## மோதல் குறித்து விசாரிக்க குழு அமைப்பு

யாழ்.பஸ் நிலையப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற களேபரங்கள் தொடர்பாக விசாரணை நடத்த குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார். வடபிராந்திய போக்குவரத்துச் சபை, ஓட்டோ மற்றும் மினிபஸ் சங்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் பொலீஸாரும் அடங்கிய இக்குழு நாளை சனிக்கிழமை விசாரணையை ஆரம்பிக்கும் எனத்

(14ஆம் பக்கம் பார்க்க)

# திருக்கோவில் படுகொலைகளால் கிழக்கு எங்கும் எதிர்ப்பு அலைகள்!

## பல பகுதிகளிலும் பதற்றம்; படையினர் குவிப்பு

அம்பாறை,ஒக்ரோபர்11

**அம்பாறை மாவட்டம் திருக்கோவிலுக்கு அருகே காஞ்சிரங்குடாப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை பேரணி சென்ற பொதுமக்கள்மீது விசேட அதிரடிப்படையினர் சரமாரியாகச் சுட்டதில் ஏழு பொதுமக்கள் பலியாகினர்; இருபது பேர் வரை காயமடைந்தனர். அதிரடிப்படையினரின் இந்தக் கொடூரச் செயலால் கொதித்துப்போயிருக்கின்றது கிழக்கு மாகாணம்.**

**அதிரடிப்படையினரின் மிகமோசமான இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக கிழக்கில் பெரும் எதிர்ப்பு அலைகள் எழுந்துள்ளன. பதற்றம் நிலவும் பகுதிகளில் படையினரும் பொலீஸாரும் குவிக்கப்பட்டுள்ளனர். கிழக்கு எங்கும் வழமைநிலை பாதிக்கப்பட்டிருக்கின்றது.**

கிழக்குக் கரையோரப் பிரதேசத்தில் பெரும் பதற்றநிலை நிலவுவதைக் கண்காணிப்புக் குழுவும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

கிழக்கு மாகாணம் எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டிருக்கின்றது. கரையோரப் பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது. பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் நேற்று இயங்கவில்லை; போக்குவரத்துக்களும் பாதிப்புற்றுள்ளன.

அக்கரைப்பற்றுக்கு அப்பால் திருக்கோவில் பிரதேசத்தில் பல இடங்களிலும் கறுப்பு - வெள்ளைக் கொடிகள் பறக்கின்றன.

கல்முனை, காரைதீவு, பாண்டி

(13ஆம் பக்கம் பார்க்க)

## 2ஆம் லெப்டினன்ட் மாலதிக்கு கோப்பாயில் நினைவுச் சின்னம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் 15 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் கோப்பாய் - கைதடி வீதியில் செல்வபுரம் பகுதியில பெரும் எழுச்சியுடன் இடம்பெற்றன.

இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் 2 ஆம் லெப்டினன்ட் மாலதி வீரமரணமடைந்த இடமான அங்கு அவருக்கு நினைவுச் சின்னம் திறந்து வைக்கப்பட்டது.

திருமதி செல்வமலர் சிவஞானம்

(14ஆம் பக்கம் பார்க்க)



கோப்பாயில் நேற்று 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு சின்னத்தை மாவீரர் மேஜர் கலைமகளின் தாயார் இராமலிங்கம் மகேஸ்வரி திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்

## காஞ்சிரங்குடாவில் உயிர்நீத்தவர்களுக்காக வடக்கு - கிழக்கில் நாளை துக்கதினம் அனுஷ்டிக்க அரசியற்றுறை அழைப்பு!

கிளிநொச்சி,ஒக்.11

அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படைக்கு எதிரான ஜனநாயக ரீதியிலான வெகுஜனப் போராட்டத்தில் உயிர் நீத்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக வடக்கு - கிழக்கில் நாளை சனிக்கிழமை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அம்பாறை மாவட்ட திருக்கோவிலில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையினர் அப்பாவித் தமிழ்மக்கள்மீது மிகவும் கொடூரமான முறையில் சரமாரியாகச் சுட்டதில் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டும் 30இற்கும் மேற்பட்டோர் படுகாயத்திற்கும் உள்ளான சம்பவமானது மிகவும் மோசமானதும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

கடந்த பெப்ரவரி மாதம் புரிந்துணர்வு உடன்பாடு ஏற்பட்டகாலப் பகுதியில் இருந்து அமைதியான ஒரு புறச் சூழலிலே நிம்மதியான, சுதந்திரமான வாழ்வை எதிர்பார்த்துக் காத்திருக்கும் வடக்குக் கிழக்கிலே வாழ்கின்ற மக்களுக்கு, அப்பகுதியில் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட இக் கொடூரமான - கண்மூடித்தனமான - தாக்குதல் நடவடிக்கையானது மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளதுடன் எதிர்கால சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக பல ஐயப்பாடுகளையும் அவர்கள் மனதில் தோற்றுவித்துள்ளது. இராணுவ பலங்கொண்டு அடக்கமுற்படுவதானது தற்போதைய அமைதி முயற்சியில் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் கேள்விக்குரியதாக்கிவிடும்.

விடுதலைப் புலிகளினால் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சமா

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாலசிங்கம், ஹெல்கீஸன் வருகையின்பின் கூட்டுச் செயலணி பற்றி ஆராயப்படும்

புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மிக விரைவில் இலங்கை வருவார். நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கீஸனும் இங்கு வருவார். முதல் சுற்று சமாதானப் பேச்சுக்களின்போது தீர்மானிக்கப்பட்ட கூட்டுச் செயலணிக்குழு பற்றி இவர்களின் வருகையின் பின்னர் கலந்தாலோசிக்கப்படும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

மனிதநேய மற்றும் பொருளாதாரத் தேவைகளை ஆராய்வதே கூட்டுச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோவில் படுகொலைக்கு பிரதமர் கவலை தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.11

அம்பாறை, திருக்கோவில், காஞ்சிரங்குடாப் பகுதியில் ஏழு பொதுமக்கள் பலியான சம்பவத்திற்கு பிரதமர் அலுவலகம் கவலை தெரிவித்துள்ளதுடன், இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களின் குடும்பத்தினருக்கும் காயமடைந்தவர்களுக்கும் நஷ்டஈடு வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

காஞ்சிரங்குடா பகுதியில் நடந்த சம்பவம் தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணை நடத்தும் அதேவேளை,

(14ஆம் பக்கம் பார்க்க)

## காஞ்சிரங்குடா சம்பவம் குறித்து கண்காணிப்புக் குழுவினர் அறிக்கை

கொழும்பு,ஒக்.11

காஞ்சிரங்குடா சம்பவம் குறித்து கண்காணிப்புக்குழு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருக்கோயிலுக்குத் தெற்கே உள்ள காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமுக்குள் கடந்த புதன் மாலை ஐந்து மணிக்கு பின்னர் பெரும் சனக்கூட்டம் பலவந்தமாக நுழைந்த போது இடம்பெற்ற சம்பவங்களில ஏழு பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்; 14பேர் காயமடைந்தனர்.

முகாமுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்த சுமார் ஐந்நூறு முதல் ஆயிரம் பேரைக் கொண்ட கூட்டம், முகாமின் பிரதான வாயிலையும் முட்கம்பி வேலிகளையும் உடைத்துக்கொண்டு முகாமுக்குள் நுழைய முயன்றபோது கூட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமற்போனது.

முகாமின் கட்டளை அதிகாரியின் தகவலின்படி - கூட்டத்திலிருந்தோர்

(13ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்


# கிளிநொச்சி எழுச்சி நிகழ்வில்....




விடுதலைப் புலிகளின் 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் 15 ஆவது நினைவுநாளான நேற்று கிளிநொச்சியில் தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் கேணல் விதுஷா, கேணல் துர்க்கா உட்பட மகளிர் படையணிகளின் தளபதிகள் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட புலிகளின் மூத்த தளபதிகளையும் முதல் வரிசைப் படங்களில் காணலாம்.

மகளிர் படையணிகளின் கம்பீர அணிவகுப்புகளை அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள்: தேவராஜன், அற்புதன்)*









# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்ப்பாணம் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

காலை 8.30 மணிமுதல் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளும் அணிகள்

**14 வயதுப்பிரிவு**

★ சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் சென் ஜோசெப் மகா வித்தியாலயம்.

**16 வயதுப்பிரிவு**

★ சென் ஜோசெப் மகா வித்தியாலயம் எதிர் சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

★ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை எதிர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.

பிற்பகல் 2 மணிமுதல் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில்

**14 வயதுப்பிரிவு**

★ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை எதிர் யாழ்.மத்திய கல்லூரி

**16 வயதுப்பிரிவு**

★ சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க.த.க.பாடசாலை

**18 வயதுப்பிரிவு**

★ யாழ்.மத்திய கல்லூரி எதிர் சென் சாள்ஸ் மகா வித்தியாலயம்

(ஓ-5-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இப்போட்டிகள் 16,18,20 வயதுப் பிரிவினர்களுக்கிடையே இடம்பெறவுள்ளன.

(ஓ-5-86)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் வி.க 'பி' அணியும், பாரதி வி.க.அணியும் மோதுகின்றன.

(ஓ-5)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.11

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(ஓ-5)

### ஆசிய விளையாட்டு விழாவில்

# தமயந்தி தர்ஷா தங்கம் வென்றார்! சுசந்திகா போட்டியிலிருந்து விலகல்!!

14ஆவது ஆசிய விளையாட்டு விழாவில் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் இலங்கை வீராங்கனை தமயந்தி தர்ஷா தங்கப்பதக்கம் வென்றார். இப்போட்டிகளில் இலங்கை வென்ற இரண்டாவது தங்கப்பதக்கம் இதுவாகும்.

நேற்றுக் காலை நடைபெற்ற இப்போட்டியில் தர்ஷா 51.13 செக்கன்களில் ஓடிமுடித்தார். ஆசிய விளையாட்டு விழாவில் இது புதியசாதனை ஆகும்.

1998 இல் 200 மீற்றர், 400 மீற்றர் ஆகிய இரு போட்டிகளிலும் புதிய சாதனையுடன் தங்கப்பதக்கங்களை வென்றவர் தமயந்தி தர்ஷா.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்ட இறுதிப் போட்டியில் இலங்கை வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்க பங்குபற்றவில்லை. காலில் ஏற்பட்டுள்ள காயமே இதற்குக் காரணம். 100 மீற்றர் போட்டியில் தங்கம் வென்ற சுசந்திகா, 200 மீற்றரிலும் தங்கப்பதக்கம் வெல்வாரென அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், நேற்று அவர் களமிறங்கவில்லை.

சுசந்திகா காயமடைந்துள்ளதால் அவர் பெண்களுக்கான 4×100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பங்குபற்றுவாரா என்பது சந்தேகத்திற்கு இடமாகவுள்ளது.

மற்றொரு முன்னணி வீராங்கனையான ஸ்ரீயானிகுலவன்ஸவும் காயமடைந்துள்ளார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிய விளையாட்டு விழாவின் அஞ்சலோட்டப் போட்டிகள் எதிர் வரும் ஞாயிறன்று நடைபெறவுள்ளன.

# இஸ்ரேலியத் தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்!

லண்டன்,ஒக்.11

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவன் புறநகர்ப் பகுதியில் நேற்று பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதலாளி நடத்திய தாக்குதலில் ஒரு



பெண் கொல்லப்பட்டார். கடந்த மாதம் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில் இஸ்ரேலிய பலஸ்தீன அதிகாரிகள் பேச்சு நடத்திய பின்னர் இடம்பெற்ற முதலாவது பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல் இதுவாகும்.

காஸா பிரதேசத்தில் இஸ்ரேலியப் படையினரின் தாக்குதலில் பலஸ்தீனர்கள் உயிரிழந்ததையடுத்தே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பினப்பிராக் பகுதியில் உள்ள பஸ்தரிப்பிடத்திலேயே இந்தத் தற்கொலைத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

காலை வேளையில் அன்றாடப் பணிகளுக்குச் செல்வோர் நிறைந்த பஸ் ஒன்று தரிப்பிடத்தில் வந்து நின்றது. அப்போது பஸ்ஸில் ஒரு பலஸ்தீன நபர் ஏறமுயன்றார். அவரது உடலில் வயர் சுற்றியிருப்பதைக் கண்டு கொண்ட பஸ்சாரதி, அந்த நபரை பஸ்ஸினுள் நுழைய விடவேண்டாம் என்று அலறினார். அதனையடுத்து பயனிகளில் சிலர் அந்த நபரை வெளியே நெட்டித்தள்ளினர் . இந்த இழுபறியில் பஸ்ஸின் அருகே நின்று அந்த நபர் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டை வெடிக்க வைத்து இறந்தார். பஸ்ஸில் பயனித்த இஸ்ரேலியப் பெண்மனி ஒருவரும் இதில் கொல்லப்பட்டார்; 12 பேர் காயமடைந்தனர். அந்த நபர் பஸ்ஸினுள் நுழைந்த பின்னர் குண்டை வெடிக்க வைத்திருந்தால் உயிரிழப்புக்கள் அதிகரித்திருக்கும்.

- இவ்வாறு இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் இரவு மேற்குக்கரைப்பகுதியில் இஸ்ரேலிய இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் 70 பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாக். தேர்தலில் வன்முறைகள்

பாகிஸ்தானில் தற்போதைய இராணுவ ஆட்சி ஏற்பட்ட பின்னர் முதல் தடவையாக நேற்று நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது வன்முறைகளும், உயிரிழப்புக்களும் இடம்பெறறன.

நாடெங்கிலும் சுமார் 65 ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களில் பாகிஸ்தானியர்கள் வாக்களித்தனர்.

வாக்களிப்புக்குப் பின்னர் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில் முன்னாள பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் கட்சிக்கும் அதிபர் பர்வேஷ் முஷாரபின் கட்சிக்குமிடையே கடும் போட்டி நிலவுமென்றும் -

தொங்கு நாடாளுமன்றமே ஏற்படுத்தப்படுமென்றும் - தெரியவருகிறது. (ஒ)

# இரசாயனவியலுக்கான நோபல் பரிசு மூவருக்கு

ஸ்டாக்ஹோம்,ஒக்.11

இந்த ஆண்டு இரசாயனவியலுக்கான நோபல் பரிசைப் பெற அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானி ஜோன் ஃபென், ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானி கோய்சி தனாகா, சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த விஞ்ஞானி குர்த் வூத்ரிச் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதை நோபல் பரிசுத் தேர்வுக்குழு நேற்றுமுன்தினம் ஸ்டாகஹோமில் அறிவித்தது.

பரிசுத் தொகையான சுமார் 10 கோடியில் பாதித் தொகை வூத்ரிச்சுக்கும், மீதித் தொகை ஃபென் மற்றும் தனகாவுக்கும் பகிர்ந்து அளிக்கப்படும் என்றும் அக்குழு தெரிவித்துள்ளது. புரோட்டீன்கள் போன்ற உயிரிமூலக்கூறுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான மிகத் தெளிவான ஆய்வு முறைகளை அந்த விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். புரோட்டீன்களை விரிவாக ஆராய்வதன்மூலம் உயிரின் பரிணாமத்தை மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ள வழி ஏற்பட்டுள்ளது. உயிரி மூலக்கூறு ஆராய்ச்சியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் பயனாக, மார்பகப் புற்றுநோய் உள்ளிட்ட நோய்களை முன்கூட்டியே கண்டுபிடிக்கமுடியும் என்று ஸ்வீடனின் அறிவியல் மன்றம் குறிப்பிட்டுள்ளது.

இதேசமயம், அமெரிக்காவைச் சேர்ந்த வெர்னான் ஸ்மித், டேனியல் காணேமன் இருவரும் பொருளாதார அறிவியல் துறையில் இந்த ஆண்டுக்கான நோபல் பரிசைக் கூட்டாகப் பெறுகின்றனர்.

பொருளாதார ஆய்வில் உளவியல் ஆராய்ச்சி, சோதனைக்கூட பரிசோதனை ஆகியவற்றைப் பயன்படுத்தியதற்காக அவர்களுக்கு இப்பரிசு அளிக்கப்படுகிறது. பரிசுத் தொகையான 10 லட்சம் டொலர்களை இருவரும் பகிர்ந்து கொள்வர். (ஒ)

# ஈராக் இராணுவ தளபதிகளுடன் சதாம் அவசர ஆலோசனை

ஈராக் இராணுவத் தளபதிகளை கடந்த 48 மணிநேரத்தில் இரு முறை அவசரமாகச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளார் அந்நாட்டின் அதிபர் சதாம் ஹுசைன். ஈராக் தொலைக்காட்சி இத்தகவலைத் தெரிவித்தது.

ஈராக் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா முற்பட்டால் அதை முறியடிப்பதற்கான வழிவகைகள் குறித்து இக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. பாக்தாத் நகரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சதாமின் மகனும் அவருடைய மெய்க் காப்பாளர் படைத் தலைவருமான குசே, பாதுகாப்புத் துறை அமைச்சர் தவாப் முல்லா ஹலிவேஷ் மற்றும் முப்படைத் தளபதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். (ஒ)



அவுஸ்திரேலியாவில் மூண்டுள்ள காட்டுத்தீ குடியிருப்புப் பகுதிகளுக்கும் பரவிப்பற்றியெரிவதைப் படத்தில் காணலாம்.

## அமெரிக்காவைக் கலக்கும்

# வெள்ளை வான் மர்மமனிதன் மற்றொருவரைக் கொன்றான்!

வாஷிங்ரன்,ஒக்.11

அமெரிக்காவில் சமீபகாலமாகப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள 'வெள்ளை வானில் வரும் மர்ம மனிதன்' நேற்று முன்தினம் வேர்ஜினியாவில் எரிபொருள நிரப்பும் நிலையமொன்றில் ஒருவ



ரைச் சுட்டுக்கொன்றான்.

நேற்றுமுன்தினம் உள்ளூர் நேரப்படி இரவு 8 மணிக்கு, இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சுடப்பட்டு இறந்தவரின சடலமருகே 'அன்பான பொலீஸாரே நான்தான் கடவுள்' என்று பொறிக்கப்பட்ட அட்டையை பொலீஸார் கண்டெடுத்தனர்.

மேரிலாண்டிலும், வாஷிங்ரனிலும ஏற்கனவே இதேபோன்று சுட்டுக்கொலப்பட்டவர்களின் சடலங்களின் அருகேயும் இத்தகைய அட்டையை கொலைகாரன் விட்டுச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. தவிரவும் இந்த மர்ம மனிதனின் தாக்குதலில் இருவர் காயமடைந்துமுள்ளனர்.

அமெரிக்காவைக் கலக்கும் இந்த வெள்ளை வான் மர்மமனிதனைப் பிடிப்பவர்களுக்கு 2 லட்சத்து 37 ஆயிரம டொலர்கள் அன்பளிப்பாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# அமெரிக்கப் படைமீது குவைத்தில் தாக்குதல்!

## ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

குவைத்,ஒக்.11

குவைத்தில் அமெரிக்கக் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, வாகனத்தில் வந்த இருவர் சுட்டத்தில் ஒரு வீரர் பலியானார். மற்றொருவர் காயமடைந்தார். கடற்படையினர் பதிலுக்கு திருப்பிச் சுட்டதில் அவ்விருவரும் உயிரிழந்தனர்.

குவைத் தலைநகர் அருகில் உள்ள பைலாகா தீவுப் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

எண்ணெய் வளம் மிக்க குவைத்தில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக அமெரிக்க இராணுவம் அங்கு தளம் அமைத்து பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. கடற்படை, விமானப்படை என சுமார் 10 ஆயிரம் வீரர்கள் இங்கு நிறுத்தப்பட்டுள்ளனர். இந்நிலையில் கடந்த இரண்டு வார காலமாக ஆயிரத்துக்கு மேலான வீரர்கள் குவைத்தில் போர் ஒத்திகை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த செவ்வாய் காரில் சாதாரண உடையில் வந்த இருவர், அமெரிக்கக் கடற்படை வீரர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இதில் ஒரு வீரர் பலியானார். மற்றொரு வீரர் குண்டுக்காயம் அடைந்தார்.

கடற்படையினர் பதிலுக்குச் சுட்டதில் காரில் வந்த இருவரும் உயிரிழந்தனர். அவர்கள் பெயர் அனாஸ் அல் காந்தாரி, ஜாஸம் அல் ஹஜ்ரி என்பது தெரியவந்துள்ளது. குவைத்தைச் சேர்ந்த அவர்கள் தீவிரவாதிகளா? பாதுகாப்பு நிறைந்த பகுதிக்குள் அவர்கள் எப்படி வந்தார்கள் என்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டுவருகிறது. (ஒ)

# நேபாளத்தில் குண்டுவெடிப்பு!

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில், நேபாளத் தொழில் வர்த்தக சபை வளாகத்தில் கடந்த செவ்வாய் குண்டுவெடித்தது. மூன்று பேர் அந்தக் கட்டடத்துக்கு வந்துவிட்டுச் சென்ற சில நிமிடங்களில் குண்டு வெடித்தது. இதில் எவரும் காயமடையவில்லை.

முன்னதாக மக்கள் நெருக்கம் மிகுந்த விஷால்பஜார் பகுதியில் திங்கள் இரவு குண்டு வெடித்தது. நவராத்திரியையொட்டி மக்கள் பலரும் இங்கு பொருள்கள் வாங்க வந்திருந்த போது குண்டு வெடித்தது. எனினும் இச்சம்பத்திலும் எவரும் காயமடைய வில்லை. (ஒ)

## காவேரித் தண்ணீர் பிரச்சினை:

# கர்நாடகாவை எதிர்ப்பதில் நழுவுகிறார் நடிகர் ரஜனி

சென்னை,ஒக்.11

தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிட மறுக்கும் கர்நாடக மாநிலத்துக்கு மின்சாரம் வழங்கக்கூடாது



என்று தமிழ்த் திரையுலகினர் நாளை நெய்வேலியில் மேற்கொள்ளவுள்ள போராட்டத்தில் கர்நாடகாவைப் பிறப்பிடமாகக் கொண்ட நடிகர் ரஜனி காந்த் கலந்துகொள்ள மறுத்துள்ளார். தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிடக்கோரி சென்னையில் உண்ணாவிரதம் இருக்கப்போகிறாராம் அவர்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை சென்னையில் தான் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இத்தகவல்களை நடிகர் ரஜனி வெளியிட்டார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:-

காவிரிப் பிரச்சினை தொடர்பாக தமிழ்த் திரையுலகம் நெய்வேலியில் போராட்டம் நடத்த எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அறிக்கை வெளியிட்டிருந்தேன். யாருமே இதற்கு ஆதரவு தராத நிலையில் எனது கருத்துக்கு ஆதரவு தெரிவித்த மூத்த தலைவர் கருணாநிதிக்கு நன்றி. பிரதமரைச் சந்திப்பதற்காக டில்லி சென்றேன். நேரம் கிடைக்காததால் அவரைச் சந்திக்க முடியவில்லை. இமயமலையில் பாபாஜியைத் தரிசித்தேன்.

தமிழகத்துக்கு காவிரி நீரைக் தரக்கோரி சென்னையிலேயே போராட்டம் நடத்தலாம். நெய்வேலி சென்று போராடத் தேவையில்லை.

மின்சாரத்தை நிறுத்தக்கோரி நடைபெறும் போராட்டத்தால் கர்நாடகத்தில் வன்முறை எழலாம். அங்குள்ள 40 லட்சம் தமிழர்கள் பாதிப்புக்குள்ளாக நேரிடும். கர்நாடகத் தமிழர்கள் இது குறித்து என்னிடம் தினநதோறும் கண்ணீரோடு தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் போராட்டக் குழுவினர் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நெய்வேலிப் போராட்டத்தில் பங்கேற்பதில் எனக்குப் பயம் கிடையாது. ஆண்டவன், மனசாட்சி இரண்டையும் தவிர வேறு யாருக்கும் நான் பயப்படமாட்டேன். போராட்டத்தை சென்னையில் நடத்திக்கூட மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கமுடியும் தமிழகத்துக்குக் காவிரி நீரைத் திறந்துவிடக்கோரி சென்னையில் உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன் - என்று தெரிவித்தார் ரஜனி. (ஒ)

## ரஜனி மீது விஜயகாந்த் கடும் தாக்கு!

சென்னை,ஒக்.11

நெய்வேலியில் போராட்டம் நடத்தினால் காவிரி நீரை கர்நாடகம் திறந்து விட்டுவிடுமா? என்று நடிகர் ரஜினிகாந்த் கேட்டதை தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நடிகர் விஜயகாந் கடுமையாக விமர்சித்துள்ளார்.

'தமிழ்த் திரையுலகம் ஒட்டு மொத்தமாக நெய்வேலி சென்று போராட்டம் நடத்தினால் மட்டும் கர்நாடக அரசு காவிரி நீரைத் திறந்து விட்டுவிடுமா' என்று ரஜனி கூறியுள்ளார். பிறகு ஏன் அவர் சென்னையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவேண்டும்? அவர் உண்ணாவிரதம் இருந்தால் மட்டும் காவிரி நீரைத் திறந்து விட்டு, விடுவார்களா?

கன்னட கலைஞர்கள் நடத்திய போராட்டத்தை அடுத்தே தமிழக கலைஞர்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. நம்மைக்கையாலாகாதவர்கள் என்று நினைத்துள்ளனர். கன்னட உணர்வை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் போது, தமிழ்க் கலைஞர்களும் தமிழ் உணர்வை வெளிப்படுத்த வேண்டியுள்ளது அவசியமாகிறது. தமிழர்களின் வீரத்தையும் விவேகத்தையும் உணர்த்த வேண்டியது கட்டாயம் என்றார் அவர். தமிழகத்திற்கு காவிரிநீரைத் திறந்து விடக்கூடாது என வலியுறுத்தி கன்னட திரையுலகினர் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

# கற்பகச் சோலையின் பனம்விதை நடுகை வேலைத்திட்டம்

எங்கள் தாயகத்தின் தடைகள் தளரும் இன்றைய தருணமறிந்து அன்று காலம் தந்த தோழனாகத் திகழ்ந்த உங்கள் கற்பகச்சோலை மீண்டும் உங்கள்முன் தளராது தடம்பதிக்கின்றது. காலத்திற்குக் காலம் இடம்பெயர்வே வாழ்வாகிப்போன நாங்கள், எங்கள் எதிர்காலச் சந்ததியின் வாழ்வாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம். அழிந்து போய்க்கொண்டிருக்கும் எங்கள் இயற்கைச் செல்வங்களில் ஒன்றான பனைமரங்களுக்கு இணையாக பலமடங்கு பனம்விதைகளை மீள்நடுகை செய்து பாலைவனமாகிவரும் எங்கள் தேசத்தை மீண்டும் சோலைவனமாக்குவோம். காலத்தின் தேவையறிந்து மீண்டும் உங்கள் காப்பரணாகத் திகழவிருக்கும் கற்பகச் சோலையோடு இணைந்து பனம்நடுகை வேலைத்திட்டத்தை முன்னெடுத்திட எல்லோரும் வாரீர். எங்கெல்லாம் பனம்விதை நாட்டமுடியுமோ அங்கெல்லாம் நாட்டி எங்கள் தேசம் மீண்டும் வளங்கொழிக்க வழிசமைப்போம்.

*- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.*




(சி-24158)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி
## தையல்நாயகி பொன்னம்பலம்
### (கனகாம்பிகை)

*கொக்குவில் மேற்கு, யாழ்ப்பாணம்*

நம்பவே முடியவில்லை நமதம்மா எமைப்பிரிந்து,
சென்றுவிட்ட காலந்தனை!
நேற்றுத்தான் நடந்ததுபோல் நெஞ்சமெல்லாம் வலிக்கிறது! – அம்மா
நீங்கள் எமைப்பிரிந்து இரண்டு ஆண்டுகள் ஆயிற்று!
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்!
உங்கள் பிரிவின் ரணம் எம் நெஞ்சில் வலித்துக்கொண்டேயிருக்கிறது!

எம்மை இப் பூமிக்குத் தந்து,
அன்புடன் எம்மை அரவணைத்து,
சீரும் சிறப்புமாக பண்புடன் – இப்பாரினிலே,
நாம் வாழ அயராது உழைத்த,
எங்கள் அன்பு அம்மாவே!
அன்பே உருவாய், பாசமே உறைவிடமாய்,
முகம் மலரப் புன்னகைத்து, முத்தான வார்த்தை பேசி,
அன்பைப் பொழிந்து, எம்மை அரவணைத்து
நேசித்த தெய்வமே! – நீங்கள்
இல்லாது தவிக்கிறோமம்மா!

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்,
உங்கள் பசுமையான நினைவுகள் – எம்மை
விட்டு என்றும் அகலாது!

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

அன்னையின் அரவணைப்பில் 08.02.1944

ஆண்டவன் அரவணைப்பில் 02.10.2000

இன்று (11.10.2002) வெள்ளிக்கிழமை எமது கொக்குவில் மேற்கு அரசடியிலுள்ள இல்லத்தில் அமரரின் இரண்டாவது வருட நினைவஞ்சலி நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நடைபெறுகின்றது.

*என்றும் உங்கள் இனிய நினைவுகளை நெஞ்சங்களில் சுமந்து நிற்கும்*
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெரியம்மா குடும்பத்தினர்,
*கனடா.*
Tel: (416) 288-9306

தகவல்:
பொ.கோடீஸ்வரன் *(மகன்)*
*கொக்குவில் மேற்கு.*

(9221)

உதயன்

## அதிரடிப்படையினரின் அடாவடித்தனம்

அரசு - புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் தற்போதைய அமைதிப் பேச்சுகளுக்கும் சவால் விடுக்கும் பல சம்பவங்கள் அண்மைக் காலத்தில் இடம்பெற்று வருகின்றன.

அந்த வரிசையில் மிக மோசமான சம்பவம் நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடாப் பகுதியில் இடம்பெற்றிருக்கின்றது.

விசேட அதிரடிப்படையினரின் அத்துமீறிய தாக்குதல்களைக் கண்டித்து பேரணியாகச் சென்றோர் மீது விசேட அதிரடிப்படையினர் சரமாரியாகச் சுட்டதில் எட்டுப் பொதுமக்கள் அநியாயமாக உயிரிழந்திருக்கின்றனர்; இருபது பொதுமக்கள் வரை காயமடைந்துள்ளனர்.

நிராயுதபாணிகளாகச் சென்ற புலிகள் உறுப்பினர்களை விசேட அதிரடிப்படையினர் வம்புக்கு இழுத்து கண்மண் தெரியாமல் தாக்கியதே மிகக் கொடூரமான இந்தப் படுகொலைகளுக்கு மூல காரணமாயிற்று.

இவ்வாறு இந்தப் பகுதியில் அதிரடிப்படையினர் அண்மைக்காலத்தில் புலிகள் மீது காரணம் ஏதுமின்றி தாக்குதல் நடத்திய மூன்றாவது சம்பவம் இது.

புலிகளுக்குப் பின்னால் மக்கள் அணி திரண்டுள்ளனர்; தமிழ்மக்கள் தமது ஏகப் பிரதிநிதிகளாக - தங்களுக்காக உயிர்ப்போராட்டம் நடத்தும் புலிகளை வரித்துக் கொண்டுள்ளனர். இந்த நிலையில் காரணமின்றி - அவமானப்படுத்தப்படும் வகையில் - புலிகள் மீது அதிரடிப்படையினர் தாக்குதல் நடத்துவது பொதுமக்களை ஆத்திரம் கொள்ளவைத்ததில் வியப்பேதுமில்லை. கொதித்துப்போன மக்கள் தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் விதத்தில் ஊர்வலமாகச் சென்றதிலும் ஆச்சரியமில்லை.

ஆனால், ஊர்வலமாகச் சென்ற அப்பாவிப் பொதுமக்களை கண்டபடி சுட்டுக்கொன்று விட்டு "நூற்றுக்கணக்கில் புலிகள் வந்து முகாமைத் தாக்கினார்கள். அதனால் திருப்பிச் சுட்டோம்" என்றும் "முகாம் மீது தாக்குதல் நடத்திய புலிகளே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்" என்றும் அதிரடிப்படைத் தரப்பில் கதை விடுவதுதான் வேதனை கலந்த ஆச்சரியத்தைத் தருகின்றது.

போராட்டப் போக்கை விடுத்து, அரசியல் நிலைப்பாட்டில் பார்த்தால் இன்று தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறு அல்லர். மக்களே புலிகள்; புலிகளே மக்கள்.

இதைத்தான் மனதில் கொண்டு, பொது மக்களைக் சுட்டுக்கொன்றுவிட்டு புலிகளைச் சுட்டதாக அதிரடிப்படையினர் கதை விடுகின்றார்களோ தெரியவில்லை.

வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆயுதங்களின்றி - நிராயுதபாணிகளாக - மக்கள் மத்தியில் அரசியல் பணிபுரிய வந்திருக்கின்றார்கள் புலிகள்.

அந்தப் புலி உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு அரண் - கவசம் - பொதுமக்கள்தான்.

அரசியல் பணியாற்ற வந்த புலிகள், அநியாயமான முறையில் தாக்கப்பட்டால், அவர்களின் கவசங்களான பொதுமக்கள் கொதித்துப் போவதில் நியாயம் உண்டல்லவா?

நாங்கள் புலிகளைத் தாக்கினால் இவர்கள் யார் கேள்வி கேட்க என்ற மனப்பாங்கு விசேட அதிரடிப் படையினருக்கு வரக்கூடாது.

அமைதி நிலையை - சமாதானச் சூழலை - குழப்பி, அராஜகம் புரிய நினைக்கும் அதிரடிப்படையினரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசுத் தரப்பு திடமான - இறுக்கமான - முடிவுகளை எடுக்க வேண்டும்; எல்லை மீறி அடாவடித்தனம் புரியும் அதிரடிப்படையைக் கட்டுப்படுத்த உரிய - கண்டிப்பான - நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இல்லையேல், பெருவிலை கொடுத்து இதுவரை கட்டி வளர்த்த சமாதானச் சூழ்நிலையை ஓரிரு நாள்களில் அதிரடிப்படையினர் தகர்த்து விடுவர்.

மக்களைப் படுகொலை செய்துவிட்டு, அதற்கு அதிரடிப்படையினர் காட்டும் டொம்பக் காரணங்களை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரித்து, அவர்களின் செயற்பாட்டை நியாயப்படுத்தி ஊக்குவிக்கும் பணியில் சில பேரினவாத ஊடகங்கள் ஈடுபட்டுள்ளன.

சமாதான முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் இச் செயற்பாடு, தமது தலையில் தாமே மண்ணை வாரியிறைக்கும் செயலாகவே அமைந்துவிடப் போகின்றது என்பதை அந்த ஊடகங்கள் உணர்ந்து கொள்வது நல்லது.

காலம் தாழ்த்தி உணர்வது 'கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்யும்' செயலாகி விடும்.

---

### குடாநாட்டுப் பிரதேசத்திலிருந்து

# அரும்பொருள்கள் கடத்தப்படுவதை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும்!

## யாழ்.செயலகக் கலந்துரையாடலில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் போன்றவை குடாநாட்டில் இருந்து தரைவழியாகவோ அல்லது வேறு வ்ழிகள் மூலமோ வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்லப்படுவது உடனடியாகத் தடைசெய்யப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ்.செயலகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

குடாநாட்டு மக்களினால் பரம்பரை பரம்பரையாகப் பாதுகாக்கப்பட்டுவந்த அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் மற்றும் கலைப் பொருள்கள் தரைவழிப்பாதை திறக்கப்பட்ட பின்னர் திட்டமிட்ட அடிப்படையில் தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்படுவதாகவும் -

இதனால் ஈழத்தமிழர்களின் வரலாற்று இருப்பு கேள்விக் குறியாகும் அபாயநிலை தோன்றியுள்ளதாகவும் -

இது குறித்து வரலாற்று விழிப்புணர்வு கொண்ட அனைவரும் ஒருமித்துச் செயற்படவேண்டும் என்றும் -

கலந்துரையாடலில் ஏகோபித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அரும்பொருள்களைப் பாதுகாத்தல் மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான விடயங்களைக் கவனிப்பதற்கென குழு ஒன்றும் இந்தக் கலந்துரையாடலின் போது நியமனம் செய்யப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

☆பிரதேசரீதியாக அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் காணப்படும் இடங்கள் அடையாளம் காணப்படும். அத்துடன் அவை தொடர்பான விவரங்களை சேகரிக்கும் பணியில் கலாசார உத்தியோகத்தர்கள் ஈடுபடுவர்.

☆இவ்வாறு இனங்காணப்படும் அரும்பொருள்களை சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் ஆவணப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு முதற்கட்டமாக நெசவு நிலையங்களைப் பயன்படுத்த அனுமதி வழங்குவதாக மாகாண தொழிற்றுறைத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார்.

☆அரும்பொருள்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்களை கணனி மற்றும் 'டிஜிற்றல்' சாதனங்கள் மூலம் ஆவணப்படுத்துதல். இதற்கும் தொழிற்றுறைப் பணிப்பாளரின் ஒத்துழைப்பு பெறப்படும்.

☆அரும்பொருள்கள் குடாநாட்டை விட்டு எடுத்துச் செல்லப்படுவதை தடைசெய்யும் வகையில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரையும் நடவடிக்கை எடுக்குமாறு கோருதல்.

☆யாழ்.குடாநாட்டின் வரலாற்றை - ஈழத்தமிழர்களின் இருப்பை - பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகளுக்கு நிதியுதவி வழங்குமாறு மாகாணசபை நிர்வாகத்திடம் கோருதல்.

☆அரும்பொருள்கள் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல். இது தொடர்பான பிரசாரப்பணிகளில் அரச உத்தியோகத்தர்களும், பல்கலைக்கழக நுண்கலை, வரலாற்றுத்துறைச் சமூகமும் ஒன்றிணைந்து செயற்படுதல்.

☆வரலாற்று இருப்பு மற்றும் அரும்பொருள்கள், பண்பாட்டுச் சின்னங்கள் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதற்கு செய்தி ஊடகங்களின் உதவியினைப் பெறுதல்.

☆குடாநாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் அரும்பொருள்களை ஆவணப்படுத்தும் வகையிலும், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் அறிந்துகொள்ளும் வகையிலும் இணையத் தளம் ஒன்றை உருவாக்குதல்.

ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதேவேளை மேற்படி அரும்பொருள்களைப் பாதுகாத்தல் தொடர்பான அடுத்த கலந்துரையாடல் எதிர்வரும் 17ஆம் திகதி யாழ்.செயலகத்தில் நடைபெறும். (ஏ)

---

## பல்கலை. அனுமதிபெற விண்ணப்பிப்போருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.11

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் 2003 - 2004 கல்வியாண்டுக்கு அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்பும் மாணவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழக நலச் சேவைகள் பிரிவு சில அறிவுறுத்தல்களை தெரிவித்துள்ளது.

இக்கல்வியாண்டுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் யாழ்.பூபாலசிங்கம் புத்தகசாலையில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந்த அறிவுறுத்தல்கள் கூறப்பட்டுள்ளன.

மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப்படிவங்களை பூர்த்தி செய்யும்போது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டி நூலைத் தெளிவாக வாசித்து விளங்கியபின் விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்யுமாறும் -

பூர்த்திசெய்யும்போது தமது பரீட்சைச் சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிடுமாறும் பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவின் உதவிப் பதிவாளர் கெ.ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக மாணவர்கள் தாம் விரும்பும் கற்கை நெறியை தெரிவுசெய்யும்போது தாம் விண்ணப்பிக்கத் தகுதியுடைய அனைத்துக் கற்கை நெறிகளையும் விண்ணப்பப்படிவத்தில் கேட்கப்பட்ட விருப்புத் தெரிவுகளின் அடிப்படையில் குறிப்பிடுமாறும் -

அதேபோல் பல்கலைக்கழகங்களைத் தெரிவுசெய்யும்போது தாம் விண்ணப்பிக்கத் தகுதியுடைய கற்கை நெறிகள் நடைபெறும் அனைத்துப் பல்கலைக்கழகங்களையும் விருப்பு ஒழுங்கில் குறிப்பிடுமாறும் - அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

கடந்தகாலங்களில் பல்கலைக்கழகம் செல்லக்கூடிய சந்தர்ப்பம் பலருக்குக் கிடைத்தபோதும் மேற்குறிப்பிட்ட விடயங்களில் கவனம் செலுத்தாமையால் அந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிட்டதாகவும் - அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு விண்ணப்பப்படிவங்களை பூர்த்திசெய்யும்போது அவதானமாகவும், தெளிவாகவும் பூர்த்திசெய்து விண்ணப்பிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-5)

---

## பல்கலை. பட்டமளிப்பில் மேலும் மூவருக்கு கௌரவம்

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள 22ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் மேலும் மூவருக்கு கௌரவப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பாலச்சந்திரன், பேரவை உறுப்பினர் எஸ்.சிவபாதசுந்தரம் ஆகியோர் தேகாந்த நிலையிலும் -

மற்றும் பேரவை உறுப்பினர் ஏ.சோமசுந்தரம் ஆகியோரே இவ்வாறு கௌரவப் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

இதேவேளை - ஏற்கனவே ஐந்து பேருக்கு கௌரவப் பட்டங்களை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவர்களுடன் சேர்த்து இம்முறை மொத்தம் எட்டுப் பேர் கௌரவப் பட்டங்கள் பெறவுள்ளனர். (எ-5)

**நாளை**

புரட்டாதி 26

சனிக்கிழமை

(12.10.2002)

திதி : ஸப்தமி

பின்னிரவு 4.47 வரை.

நட்சத்திரம்: மூலம்

மாலை 6.23 வரை.

சரஸ்வதி பூஜை ஆரம்பம்

சுபநேரம் : 3.02 - 4.31

ராகுகாலம் : 9.01 - 10.32

(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தனி மனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால் தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

---

## இதயம் வெளியே தெரியப் பிறந்த ஆட்டுக்குட்டிக்கு சத்திரசிகிச்சை

அச்சுவேலி,ஒக்.11

இதயம் வெளியே தெரிந்த நிலையில் பிறந்த ஆட்டுக்குட்டியின் இதயத்தை உரிய இடத்தில் சத்திர சிகிச்சைமூலம் பொருத்தியுள்ளார் யாழ்.மாவட்ட கால்நடை வைத்திய அத்தியட்சகர் எஸ்.தங்கராசா.

கைதடி வடக்கில் விவசாயி ஒருவர் வளர்த்த ஆடு, செயற்கை முறைச் சினைப்படுத்தல்மூலம் ஈன்ற ஆட்டுக்குட்டியின் நெஞ்சுப் பகுதி பெரிய அளவில் பிளவுபட்டு இதயம் வெளியே காணப்பட்டது.

இத்தகவல் யாழ்.மாவட்ட கால்நடை வைத்திய அத்தியட்சகருக்குத் தெரிய வந்ததும் அத்தியட்சகர் தங்கராசா நேரடியாகச் சென்று ஆட்டுக்குட்டியின் இருதயத்தை உரிய இடத்தில் நிலைநிறுத்தும் சிகிச்சையை மேற்கொண்டார்.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியதாகவும், ஆட்டுக்குட்டி ஆரோக்கியமாக இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-11)

---

## சிற்றூழியருக்குச் சீருடை

வலி.தெற்கு,ஒக்.11

மாகாணப் பொது நிர்வாகத்தின் புதிய சுற்று நிருபத்துக்கு அமைய அலுவலகங்களில் பணிபுரியும் சிற்றூழியர்களுக்கான சீருடைகள் வழங்கப்படவுள்ளன.

புதிய சுற்றுநிருபத்தின்படி ரோணியோ இயந்திர இயக்குநர்கள், சைக்கிள் ஏவலாளர்கள், தூது ஏவலாளர்கள், காவலாளர்கள், அலுவலகப் பணியாளர் தரம் 2, சுகாதார தொழிலாளர்கள் தரம் 2ஏ ஆகிய தரத்தினருக்கே சீருடைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே 20.03.1997, 15.03.1997, 12.11.1996, 15.05.1996 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட சகல சுற்றறிக்கைகளும் ரத்துசெய்யப்பட்டுள்ளதாகவும் பொது நிர்வாக மாகாண உதவிச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ-152)

---

## பெற்றோலியப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கக்கூடும்

கொழும்பு,ஒக்.11

அடுத்த வாரம் முதல் பெற்றோலிய பொருள்கள் மற்றும் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் மேலும் அதிகரிக்கப்படலாம் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் நகும் விமலசேன தெரிவித்துள்ளார்.

உலகச் சந்தையில் பெற்றோலியப் பொருள்களின் உற்பத்தி விலையில் 30சதவீத உயர்வு ஏற்பட்டுள்ள காரணத்தால் இவ்விலை அதிகரிப்பைத் தவிர்க்க முடியாதுள்ளதாகவும் - ஆயினும் விலை உயர்வை எவ்வளவு தொகையால் அதிகரிப்பதென இதுவரை தீர்மானிக்கப்படவில்லையெனவும் -

அவர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவுக்கும் ஈராக்கிற்கும் இடையிலான தற்போதைய முறுகல் நிலையால் பெற்றோலிய உற்பத்தி நாடுகளின் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே உலகச் சந்தையில் பெற்றோலிய விலை அதிகரிப்புக்கான காரணம் எனக் கூறப்படுகிறது. (ஒ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/சுதுமலை
சிந்மய பாரதி
வித்தியாலயத்தில்
2002ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சையில் 137 புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்த

## செல்வி புவனா துஷ்யந்தன்

அவர்களை மேலும் கல்வியில் சிறப்புற வாழ்த்துவதுடன், அப் பரீட்சையில் சித்தியடைந்த சக மாணவர்களான,

| | | | |
|---|---|---|---|
| செல்வி அ.அபிராமி | 156 | செல்வி பி.வாசுகி | 119 |
| செல்வி கி.சஜிதா | 156 | செல்வி சி.தர்சிகா | 118 |
| செல்வி தெ.கௌசிகா | 143 | செல்வன் ச.நிவாந் | 137 |
| செல்வி கு.கார்த்திகா | 138 | செல்வன் கு.கவிவர்மன் | 125 |
| செல்வி ச.நிவேகா | 135 | செல்வன் சி.சசிராஜ் | 124 |
| செல்வி ச.குணசங்கரி | 124 | | |

ஆகியோரையும் பாராட்டுவதுடன், இப்பிள்ளைகளின் வெற்றிக்கு உழைத்த அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் பிரத்தியேக வழிகாட்டல் வகுப்புகளை நடத்திய யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் தமது முத்திரையைப் பதித்த உப அதிபர் திரு.தி.அருட்பிரகாசபிள்ளை அவர்களுக்கும் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் வை.பங்கையற்செல்வி அவர்களுக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அருள் கிடைக்கவேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

அப்பா, அம்மா, தம்பிமார், அப்பம்மா,
அம்மம்மா, தாத்தா, சித்தப்பாமார்,
மாமாமார், மச்சான்மார்,
அன்ரிமார், அத்தைமார்.

*உடுவில் தெற்கு,*
*பாலாஓடை, மானிப்பாய்.*
(9274)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பூவுலகில்
14
-
05
-
1960



வானுலகில்
11
-
09
-
2002

## திருமதி இரகுநாதன் ஜெயநாயகி

அன்பும் பண்பும் நிறைந்த அணையாத அகல்விளக்கே!
உங்கள் நினைவும் என்றும் எம் நெஞ்சங்களில்
நிலைத்திருக்கும்.

அமரரின் அவஸ்தை நிலையிலும், அவ்வொளி விளக்கு அணைந்த வேளையிலும், உடன் நின்று விண்ணக வழியனுப்பும்வரை பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அன்பு இதயங்களுக்கும்,

தம் அனுதாப உணர்வுகளைச் சொல்லிலும், செயலிலும், மலர் வளையம் சாத்தியும், துயர் தெரிவித்த அன்பு நண்பர்கள், உறவினர் அனைவருக்கும் 15.09.2002 நடைபெற்ற இறுதிக்கிரியையில் கலந்து எமக்கு ஆறுதல் நல்கிய அனைத்து அன்பு இதயங்களுக்கும்,

எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, இன்று (11.10.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:* தவிர்க்கமுடியாத காரணத்தினால் தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு மிகவும் மனம் வருந்துகின்றோம். எமது துக்க நிகழ்வில் பங்குகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களும் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்றைய நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

*பால்பண்ணை வீதி,*
*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*
T.P.: 077-11.021
(சி-24119)

அன்புடன்:
கணவர், மக்கள்,
தாய், சகோதரர்கள்.

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை தயாளன்

கைதடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தயாளன் கடந்த (07.10.2002), திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் இலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் மல்லாகத்தைச் சேர்ந்த கலைச்செல்வியின் அன்புக் கணவரும் சாரங்கியின் அன்புத் தந்தையும் திருதிருமதி வேலாயுதபிள்ளையின் அன்பு மருமகனும் மதியழகன் (மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்), சங்கர் (ஹொலண்ட்), மலர்ச்செல்வி (அவுஸ்திரேலியா), அறிவழகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவகுமாரன் (அவுஸ்திரேலியா), என்பவரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.10.2002) சனிக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*பங்களா லேன்,*
*மல்லாகம்.*
(9286)

தகவல்:
ச.வேலாயுதபிள்ளை (மாமனார்)

## மீளக்குடியமராத பகுதி ஆலயத்துக்கு நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,ஒக்.11

மக்கள் இன்னமும் மீளக்குடியமராத மறவன்புலோ பகுதியில் உள்ள இந்து ஆலயமொன்றின் திருத்த வேலைக்கென நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால் இந்த ஆலய திருத்த வேலைக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## கசிப்புக் காய்ச்சிய இரு நபர்கள் சிக்கினர்

தென்மராட்சி,ஒக்.11

சாவகச்சேரி, கெருடாவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட இருவர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் சிக்கிக்கொண்டனர்.

அந்த இருவரும் தண்டனையாக பொதுநலப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதை அவதானிக்கமுடிந்தது. (ஒ-117)

## ஒத்துழையாமை நடவடிக்கை முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்பல்கலைக்கழக நிதிக்கிளையினர் மேற்கொண்டிருந்த ஒத்துழையாமை நடவடிக்கை நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்துள்ளதாக நிதிக்கிளை உறுப்பினர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவகப் பணியாளருக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.11

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் உள்ள உணவகங்களில் வேலை செய்வோருக்கான, கொலரா பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு யாழ். மருத்துவபீட சமூக மருத்துவத்துறை மாணவர்களால் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

### வடக்கு - கிழக்கு பிரதேச

# அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஜப்பான் நிதி உதவிகளை வழங்கும்

## அந்நாட்டுப் பிரதிநிதிகள் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,ஒக்.11

யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்குப் பகுதிகளில், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நிதி உதவிகளை ஜப்பான் வழங்கும் என ஜப்பானிய இராஜதந்திரிகள் குழு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பிரமுகர்களை, இக் குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கிளிநொச்சியிலுள்ள அரசியல்துறை நடுவப் பணியகத்தில் சந்தித்தனர். அச்சந்திப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திப் பணிகள் தொடர்பான திட்ட மதிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதே தமது இந்த விஜயத்தின் முக்கிய நோக்கம் என்று ஜப்பானிய உயர்மட்டக் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது.

'இத்திட்டத்தின் கீழான நடவடிக்கைகளை ஜப்பானிய அரசே நேரடியாகச் செயற்படுத்த வேண்டும்' எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஜப்பானிய உயர் மட்டக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின்போது புலிகள் தரப்பில் சு.ப.தமிழ்ச்செல்வன், புலித்தேவன், தொல்காப்பியன் ஆகியோரும் -

ஜப்பானிய உயர்மட்டக் குழுவில் சர்வதேச கூட்டுறவு முகவரகத்தின் ரி.ராகுச்சி, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சு அதிகாரி எரிட் எய்ட், திட்ட நிர்வாகம் மற்றும் கொள்கை வகுப்பாளர் செல்வி என். நரினி, ஜப்பானிய தூதரக முதலாவது செயலாளர் கலாநிதி செல்வி என்.இசகி, ஐ.நா.பிரதிநிதி பற்றிமா செரில் றொன் ஆகியோரும் - கலந்து கொண்டனர். (ஒ-9)

# வன்னி சிறுவர் இல்லங்களுக்கு நலன்காக்கும் நிதியம் உதவி

கிளிநொச்சி,ஒக்.11

கனடாவில் இயங்கிவரும் தமிழ்ச் சிறார்களின் நலன்காக்கும் நிதியம் வன்னியிலுள்ள சிறுவர் இல்லங்களுக்கு மின்சார வசதியினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

கனடா, அமெரிக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மேற்படி அமைப்பானது இந்த நடவடிக்கையில் ஈடுபடடுள்ளது. 2 மாத காலப்பகுதிக்குள் இத்திட்டம் பூரணமாக நிறைவேற்றப்படும் என இத்திட்டத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆஸ்ரேலியாவில் ஸ்போர்க் என்னும் இடத்தில் இயங்கி வரும் 'விடிவு' என்னும் அமைப்பு வன்னியிலுள்ள சிறுவர் இல்லங்களுக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக குருகுலம் சிறுவர் பராமரிப்பு இல்லத்திற்கு 8 லட்சம் ரூபா செலவில் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது. (ஒ)

## சரசாலையில் கல்விப் பூங்கா சொந்த இடத்தில்

சரசாலை மத்தி, அம்பாள் மழலைகள் கல்விப் பூங்கா மீண்டும் சொந்த இடத்தில் இயங்குவதாக அதன் நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஒ-117)


PRIMA BEST IN FEED
PRIMA
PRIMA QUALITY CHICK

இப்பொழுது யாழ்ப்பாணத்திலும் பிறிமா வந்துள்ளது.

நாளை 12.10.2002ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு
யாழ்ப்பாணம் இல.144, ஸ்ரான்லி வீதியில்
திறக்கப்படும்

PRIMA CHICKEN SHOPஇல்

இருந்து உங்களுக்குத் தேவையான.....

1. PRIMA WHOLE CHICKEN
2. CHICKEN PARTS
3. PRIMA SAUSAGES
4. PRIMA NOODLES
5. PRIMA OIL
6. PRIMA FLOUR
7. PRIMA POULTRY FEEDS

ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

Ceylon Grain Elevators Limited
15, Rock House Lane, Colombo - 15.
Tel.: 523580, 522556, 524754
Telex: 22076 CGE CE Fax:524163
(9279)

# போலி ஊடகவியலாளர் அட்டையுடன் நாடாளுமன்றத்துக்குள் புகுந்த பெண்!

கொழும்பு,ஒக்.10

போலி ஊடகவியலாளர் அடையாள அட்டையுடன் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்த இளம் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள நாடாளுமன்றினுள் இப்பெண் எப்படி நுழைந்தார் என்பது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

'டி.என்.எல்' தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தி ஆசிரியர் என்ற போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தே இந்த இளம் பெண் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்துள்ளார்.

நாடாளுமன்றப் பொலீஸ் சோதனைச் சாவடியையும் கடந்து நாடாளுமன்ற பிரதான வரவேற்புப் பகுதியில் தனது அடையாள அட்டையை சமர்ப்பித்து பத்திரிகைகளுக்கு வழங்கப்படும் தற்காலிக அனுமதிச் சீட்டையும் பெற்றுள்ளார்.

'டிஎன்எல்' நிறுவனத்தின் செய்தி ஆசிரியர், நாடாளுமன்ற படைக்கல சேவிதருக்கு நன்கு அறிமுகமானவர்; நண்பரும்கூட. அவர் ஓர் ஆண்.

ஆனால், பெண்மணி ஒருவர் செய்தியாசிரியர் என்று கூறிக் கொண்டு வந்திருப்பது படைக்கல சேவிதருக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. இதனால் துரித விசாரணைகளை மேற்கொண்ட படைக்கல சேவிதர், 'டி.என்.எல்' நிறுவனத்துடன் தொடர்புகொண்டபோது இப்பெண்ணின் திருவிளையாடல் அம்பலமானது.

உடனடியாக இப்பெண்ணைத் தடுத்துவைத்தபின் டி.என்.எல்.' நிறுவனப் பணிப்பாளர், நாடாளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டார்.

சந்தேகத்துக்குரிய இப்பெண் யார் என்றே தனக்குத் தெரியாது என்றும், இவருக்கும் தங்கள் நிறுவனத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை -

இப்பெண்ணால் சமர்ப்பிக்கப்பட்ட ஊடகவியலாளர் அடையாள அட்டை போலியானது என்றும், தன்னுடைய கையெழுத்துப் போல மோசடி செய்யப்பட்ட கையெழுத்து அதில் இடப்பட்டுள்ளது என்றும் 'டி.என்.எல்.' நிறுவனப் பணிப்பாளர் ஷான் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.


இதனைத் தொடர்ந்து சந்தேகத்திற்குரிய இப்பெண்ணை வெலிக்கடைப் பொலீஸில் ஒப்படைத்தனர். நாடாளுமன்ற பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி பிரேமரத்தின வெலிக் கடைப் பொலீஸாருடன் இணைந்து பலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

சந்தேகத்திற்குரிய இப்பெண் சமர்ப்பித்த அடையாள அட்டையில் அவருடைய பெயர் 'பிரதீபா' என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவர் தன்னை 'சுஜாதா' என்றே அறிமுகப் படுத்திக்கொண்டுள்ளார் என நாடாளுமன்ற பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரேமரத்தின கூறினார்.

இந்தப் பெண் ஏற்கனவே பல முறை நாடாளுமன்றத்திற்கு வந்துள்ளார் எனவும், யாரோ ஒரு பிரமுகரின் சிபாரிசின் பேரிலேயே நாடாளுமன்றப் பார்வையாளர் கலரி அனுமதி பெற்றுள்ளார் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தின் பின் நாடாளுமன்றப் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளன. நாடாளுமன்றச் செய்தியாளர்களும் அரச தகவல் பிரிவினால் வழங்கப்பட்ட அடையாள அட்டையுடன் தேசிய அடையாள அட்டையையும் உடன் வைத்திருக்கவேண்டும் எனக்கேட்கப்பட்டுள்ளது.

(ம)



கனடா திருமறைக் கலாமன்றம் வருடம் தோறும் சமூக நோக்கில் வழங்கிவரும் நிதி உதவியை இம்முறை யாழ்.பஸ்ரியன் கல்வி உதவித் திட்டம் பெற்றுள்ளது.

இது தொடர்பான நிதி உதவியை யாழ்.திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் சாம் பிரதீபன், மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குநர் அருட்திரு. ஜெயக்குமார் அடிகளாரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

# கடற்படையினரை வெளியேற்றி மீளக்குடியமர அனுமதிக்குக!

## ஊருண்டி மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை,ஒக்.11

ஊர்காவற்றுறை ஊருண்டிப் பிரதேசத்தில் உள்ள பத்து வீட்டுத் திட்டப் பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை அங்கிருந்து வெளியேற்றி பொது மக்கள் மீளக்குடியமர்விற்கு உதவுமாறு இப்பகுதி மக்கள் மூன்றாவது தடவையாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள பொதுமக்கள் கையொப்பமிட்டுள்ள மேற்படி மகஜரை வேலணையில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் கையளித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இப்பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து நாவற்குழிப் பகுதியிலும் பின்னர் 1995ஆம் ஆண்டு இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து அங்கிருந்து வன்னிப் பகுதிக்கும் இடம்பெயர்ந்தோம்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலைத் தொடர்ந்து எமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பியுள்ளோம்.

இந்நிலையில் எமது பகுதியில் கடற்படையினர் நிலை கொண்டுள்ளதால் அவர்களை அங்கிருந்து வெளியேற்றி மீளக்குடியமர்விற்கு உதவுங்கள் என்றுள்ளது.

(ஒ-16)

## வடமராட்சி தெற்கு மேற்குக்கு

# நிரந்தர பிரதேச செயலரை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.11

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு இதுவரை நிரந்தர பிரதேச செயலர் ஒருவர் நியமிக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது திண்டாடுகின்றனர்.

இப்பிரதேச செயலகத்தில் நிரந்தர பிரதேச செயலராக கடமையாற்றிய செ.ஸ்ரீனிவாசன் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவ்வெற்றிடம் நிரப்பப்படாமல் இருந்து வருகின்றது.

தற்போது தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட செ.ஸ்ரீனிவாசனே வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்தின் பதில் பிரதேச செயலராகவும் கடமையாற்றி வருகின்றார். இவர் வேலை நாள்களில் மூன்றுதினங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திலும், இரு தினங்கள் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலராகவும் கடமையாற்றி வருகின்றார்.

இத்தகைய காரணத்தினால் இப்பிரதேச செயலகத்திற்கு அவசர தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு செல்லும் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாதுள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆகவே சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் இதனைக் கருத்திற்கொண்டு இவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது.

(ஒ-5)

# ஜப்பான் குழுவினர் பலருடனும்சந்திப்பு

குடாநாட்டில் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு தடையாக உள்ள பிரச்சினைகள் குறித்து ஜப்பான் குழு நேற்று முன்தினம் விரிவாக ஆராய்ந்தது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகைதந்த இந்தக் குழுவினர் யாழ்.செயலகத்துக்கு வந்து அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் அரச உயர் அதிகாரிகளைச் சந்தித்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரி உட்பட சுகாதார நிலையங்களின் தேவைகள், கல்வி, மீன்பிடி, விவசாயம் ஆகிய துறைகளில் உள்ள தேவைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் விளக்கமளித்தனர்.

மேற்குறிப்பிட்ட துறைகளில் தமது உதவிகளை வழங்கமுடியும் என்றும் -

அத்துறைகளின் தேவைகள் குறித்து ஆராயவே இங்கு வந்துள்ளோம் என்றும் - தூதுக்குழு அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-3-10)

# வைகோவின் காவல் நீடிப்பு

வேலூர்,ஒக்.11

'பொடா' வழக்கில் கைதாகி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவின் நீதிமன்றக் காவல் எதிர்வரும் 28ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக கடந்த ஜூலை 11ஆம் திகதி சென்னை விமான நிலையத்தில் வைத்து வைகோ கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து மூன்று முறை அவருடைய நீதிமன்றக் காவல் நீடிக்கப்பட்ட நிலையில் கடந்த 4ஆம் திகதி 'பொடா' சிறப்பு நீதிமன்றத்தில் வைகோ ஆஜர் படுத்தப்பட்டார். அப்போது அவருடைய காவலை மேலும் ஐந்து நாட்களுக்கு நீடித்தார் நீதிபதி ராஜேந்திரன்.

'பொடா' சட்டத்தின் கீழ் ஒருவரை விசாரணையின்றி தொடர்ந்து 90 நாள்கள் மட்டுமே வைத்திருக்க முடியும். வைகோவின் சிறைவாசம் எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் நேற்றுடன் 90நாள்கள் முடிவடைந்துவிட்டன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் காலை சென்னை பூந்தமல்லியில் உள்ள 'பொடா' சிறப்பு நீதிமன்றத்தில் வைகோ ஆஜர் படுத்தப்பட்டார்.

எந்தவிதமான விசாரணையுமின்றி தன்னை சிறைக்காவலில் வைத்துவிட்டதால், தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று வைகோ 'பொடா' நீதிமன்றத்தில் வாதாடினார்.

ஆனால், இந்த வாதங்களை ஏற்றுக்கொள்ள மறுத்த நீதிபதி ராஜேந்திரன் எதிர்வரும் 28ஆம் திகதிவரை வைகோவின் நீதிமன்றக் காவலை நீடித்து உத்தரவிட்டார்.

இதையடுத்து வைகோ மீண்டும் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம)

# அவன்தாள் பணிந்து சிவனருள் பெறுவோம்!

நீர்க்குமிழிக்கு நிகரானதுயாக்கை. நாம் பெற்றிருக்கும் இந்த மானிட சரீரம் நிலையில்லாதது; சரிகப்படுவது சரீரம்; அழியும் தன்மையது; இது வெந்தேகம்; நாளைக்கிருப்பது சந்தேகம். ஆனால், பலர் இதனை நம்பி இது நம் தேகம் என்று உரிமை கொண்டாடுகின்றனர், என்னே அறியாமை. 'நாறும் உடம்பு' என்றார் பட்டினத்தடிகள்.

இந்த உடம்புக்குள்ளே உயிர் இருக்கும்வரைதான் ஆட்டமும் பாட்டமும். திடீரென்று ஒருநாள் ஆவி பிரிந்து போய்விடும். அவ்வாறு பிரிந்து விட்டால் உடலால் பயனில்லை. அப்போது இவ்வுடம்பு அசையாமற் படுத்துவிடும். அந்த உடம்பு உதவாதது. இனி எரிக்க வேண்டியதுதான். உயிர் போய் விட்டால் நமது உடம்புக்கு மதிப்பில்லை.

**ஸ்ரீ குவலயா**

இறைவன் நம்மையெல்லாம் ஆட்டுவிக்கின்றான்; நாம் ஆடுகின்றோம். அவன் ஆடாவிட்டால் நமது ஆட்டமும் நின்று போய்விடும். எனவே, அவனன்றி ஓரணுவும் அசையாது. அந்த ஆண்டவனின் கையில்தான் எமது வாழ்க்கையும் அடங்கியிருக்கிறது.

திரைமறைவிலிருந்துகொண்டு பொம்மலாட்டக்காரன் பொம்மைகளை ஆட்டுவிக்கின்றான். வெளியிலிருந்து நாம் பார்க்கும்போது அவன் நமது கண்களுக்குப் புலப்படமாட்டான். நாம் பொம்மைகளின் அழகான ஆட்டங்களைக் கண்டு ரசித்து மகிழ்வோம். ஆனந்தமாகப் பார்க்கும் பொம்மலாட்டம் திரைமறைவிலே ஒளிந்திருக்கும் பொம்மலாட்டக்காரனின் கைகளிலேயே தங்கியிருக்கிறது.

ஒவ்வொரு பொம்மையிலிருந்தும் மெல்லிய கயிறு ஒன்று போய் பொம்மலாட்டக்காரனின் கையிலே இருக்கும். அவன் பொம்மைகளை லாவகமாகக் கயிறுகளைக் கொண்டு ஆட்டுவிக்கின்றான். திடீரென்று கயிறு அறுந்துவிட்டால் பொம்மையும் நிலத்தில் வீழ்ந்து படுத்துவிடும்; ஆட்டமும் நின்றுவிடும்.

**ஞானக்கதிர்**

இப்படியேதான் உலகமும். இறைவனின் அருட்பெருங் கருணையினால்தான் நாம் இப்பூவுலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்பதுபோல ஆண்டவனுடைய அருட்பெருங் கருணைக்குப் பாத்திரமாகியே நாம் இப்பூவுலகில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். அவன் மனம் இரங்கி அருள் செய்தால்தான் நாம் வாழலாம். வாழ்த்தவாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இறைவனுடைய அருளுக்குப் பாத்திரமாகுவதற்கு ஒரேவழி தொண்டு செய்வதேயாகும். சிவதொண்டு செய்வதில் ஆன்ம ஈடேற்றமும் மனநிம்மதியும் கிடைக்கும். ஆலயத்திலே நாம் செய்யக் கூடிய சிவதொண்டுகள் பலவுள. பூமாலை கட்டுதல், குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல், விளக்கேற்றுதல், கூட்டுதல், மெழுகுதல், நீர் தெளித்தல், பாவோதுதல், பண்ணிசைத்தல், தேரிழுத்தல், சுவாமி காவுதல், தீவர்த்தி பிடித்தல், மணி அடித்தல் போன்ற இறை தொண்டுகள் பலவுண்டு.

இவ்வாறு ஆலய தொண்டுகளைச் செய்துவருவதன்மூலம் இம்மைக்கும் மறுமைக்கும் பயன் சேர்க்கலாம்.

*நிலைபெறுமாறெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம்பிரானுடைய கோயில் புக்கு*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டு*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி*
*சங்கரா சய போற்றி போற்றியென்றும்*
*அலைபுனல் சேர் செஞ்சடையெம் மாதியென்றும்*
*ஆரூராவென்றென்றே அலறா நில்லே!*

என்பது அப்பர் தேவாரம்.

நிலையான வீட்டின்பத்தைப் பெற வேண்டுமாயின் தினசரி திருத்தொண்டு செய்து வரவேண்டும். ஆண்டவனுக்குச் செய்யவேண்டிய திருத்தொண்டுகளை உண்மையான பக்தியுடன் உளமாரச் செய்தால் நிச்சயம் பலன்கிடைக்கும்.

ஆகவே, ஆன்மபலத்தைத் தருகின்ற ஆலயத் திருத்தொண்டுகளை ஆன்ம ஈடேற்றத்துக்காகச் செய்து ஆத்மலாபத்தைத் தேடிக்கொள்ள அந்த ஆண்டவனுடைய அடிகளையே அடிபணிந்து அவனுடைய அருட்கருணைக்குப் பாத்திரமாவோமாக. ☆

# துண்டிச் சந்திக்கு அப்பால் வீதியின் ஒருபகுதி திறப்பு

கொழும்புத்துறை,ஒக்.11

கொழும்புத்துறை வீதியில் துண்டிச் சந்திக்கு அப்பால் இதுவரை காலமும் மூடப்பட்டிருந்த வீதியின் ஒருபகுதி நேற்றுமுன்தினம் புதன் கிழமை முதல் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டுள்ளது.

துண்டிச் சந்தியில் இருந்து கொழும்புத்துறை 5ஆம் குறுக்குத் தெருவரை மட்டும் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்பட்டு அப்பாதையூடாக கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்கு மக்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கொழும்புத்துறை வீதியின் தெற்குப் பக்கமாக கடற்கரைவரை முட்கம்பி வேலிகள் அமைக்கப்பட்டு அப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு மக்கள் செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தற்போது கொழும்புத்துறை கிழக்கில் 50இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இதுவரை காலமும் இவர்கள் ஆனந்தன்வடலி வீதியூடாகவே போக்குவரத்தை மேற்கொண்டுவந்தனர்.

பல பொது அமைப்புக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து படைத்தரப்பினர் மற்றுமொரு பாதையை திறந்துவிட்டுள்ளதால் இவர்களது பயணச் சிரமங்கள் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, கடலுக்குள் புதைக்கப்பட்டுள்ள தும்பு மட்டைகளை எடுத்து தும்புத்தொழிலை மேற்கொள்ள அனுமதி தருமாறு இப்பகுதி தும்புத் தொழிலாளர் படைத்தரப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-ரி)

## தென்மராட்சி தெற்கில் நெற்செய்கை மேற்கொள்வோருக்கு!

தென்மராட்சி தெற்குப் பகுதியில் படையினரால் அனுமதிக்கப்பட்ட நெல் வயல்களில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள விரும்பும் வயல் உரிமையாளர்கள் மற்றும் குததகைக்கு வயல்களில் நெற்செய்கை மேற்கொள்வோரின் விவரங்கள் பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினரால் திரட்டப்படுகின்றன.

நெற்செய்கையாளர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலரிடம் பெயர், அடையாள அட்டை இலக்கம், நெற்செய்கை மேற்கொள்ளவுள்ள வயல்களின் பரப்பளவு ஆகிய விவரங்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளனர். (ஒ-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு கோவில் வீதி, நல்லூரில் வாடகைக்கு உள்ளது (அரசாங்க, அரசசார்பற்ற அமைப்புகளுக்கு வழங்கப்படும்). தொடர்பு: இல.393/47, கோயில் வீதி, நல்லூர்.
(9249)

## புதிய இசை வகுப்புகள்

விஜயதசமி அன்று சகல இசை வகுப்புகளும் ஆரம்பம். தொடர்பு: செல்வி வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்நகர்; ஆலடி உயரப்புலம் (வைரவர் கோயிலடி), ஆனைக்கோட்டை; கோப்பாய் மத்தி (பெற்றோல் ஷெட் அருகில்), கோப்பாய்.
(9217)

## தவறிவிட்டது

உரும்பிராய் மேற்கு நல்லதம்பி சிவகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.583200118V), விசேட அடையாள அட்டை (இல. 0903032507), வாகன சாரதிப்பத்திரம் என்பன யாழ்நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புனிதவதி அன் சன்ஸ், 70C, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (9283)

சேச் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த பத்மானந்தி செல்லையா என்பவருடைய தே.அ. அட்டை (இல.747051933V), வி.அ. அட்டை (இல.0906012483) குளப்பிட்டிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். (9284)

## விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் மத்தார் ஓடையில் உடன் பயிர் செய்யக்கூடிய நிலையில் 40பரப்புத் தோட்டக் காணியும், கோப்பாய் கிருஷ்ணர் கோயிலடியில் மானிப்பாய் வீதிக்கு தெற்குப்புறம் 2 3/4 பரப்புக் கடைக் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ.மோகன், திருநெல்வேலிச சந்தை. T.P.: 070-212988 (9128)

பகிரா, பிறீமா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பதிவுசெய்தவர்களும் தேவைபபடுவோரும் உடன் தொடர்பு கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No.: 3529 (9285)

## புனர்வாழ்வுக் கழகம் மீனவருக்கு உதவி

அமெரிக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அங்குள்ள மக்களிடமிருந்து நிதியினைப் பெற்று வடக்கு - கிழக்கில் கடற்றொழிலில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு படகு, இயந்திரங்கள், மீன்பிடி உபகரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

முதற்கட்டமாக 25 குடும்பங்களுக்கு இத்திட்டம் கடன் அடிப்படையில் சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி ஊடாக நடைமுறைப் படுத்தப்பட விருக்கின்றது. இத்திட்டம் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதிக்குள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## சனீஸ்வர ஹோமம்

ஈழ நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் நாளை **(12.10.2002)** சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பகல் 12 மணிவரை சனீஸ்வர ஹோமம் நடைபெறும்.

*அனைவரும் வந்து பங்குபற்றி பூரண பலனைப் பெறுக.*

பிரதம குரு:

தாணு.வாசுதேவக்குருக்கள் (சபரீசதாசன்)

(9287) *ஆலய பரிபாலன சபை.*

## நூல் வெளியீடு

# ஏணி

கவிதை ஓவியத் தொகுப்பு

காலம்: இன்று (11.10.2002) வெள்ளி பி.ப.3.00 மணி

இடம்: யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

பிரதம விருந்தினர்:

கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன்

*(பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)*

சிறப்பு விருந்தினர்: கவிஞர் சோ.பத்மநாதன்

*(ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை)*

நூல் ஆசிரியர்: மானியூர் ரட்ணேஸ்

ஆசியுரை: ஆறு.திருமுருகன் (செஞ்சொற்செல்வர்)

நூல் அறிமுகம்: கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா

*(சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்த்துறை யாழ்.பல்கலைக்கழகம்)*

முதல் பிரதி பெறல்: திரு.க.தேவராஜா

*(வணிகத்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம்)*

நூல் ஆய்வு: திருமதி கோகிலா மகேந்திரராஜா

*(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)*

திரு.கந்தையா ஸ்ரீகணேசன்

*(விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகம்)*

இலக்கிய ஆர்வலர்களை அழைக்கின்றோம்

நுண்கலை மன்றம்,

(9297) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னப்பு குணசிங்கம்

தோற்றம் 16-07-1946 மறைவு 17-09-1985

பதினேழு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
பல்லாயிரம் நினைவுகளுடன்
நிதம் கலங்கி நிற்கின்றோம்.

3ஆம் கட்டை, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள். (9292)

## ஸ்கிறீன் பிறிண்டிங் வகுப்புகள்

ஆரம்பம் பிரிவு III

காலம்: *13.10.2002.*

தொடர்புகளுக்கு:

**S. நிசாந்தன்**

18/5, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.

(9278)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாளை (12.10.2002) சனிக்கிழமை நடைபெறுகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு நிகழ்வில் எமது பேராசான் திருமிகு

**செல்லையா திருநாவுக்கரசு**

(பண்டிதர், சைவப்புலவர் *M.A.Dip. in Ed.*)

அவர்கள் கலாநிதிப் பட்டத்தைப் பெறுவதை குறித்து அவரைப் பாராட்டி இறும்பூதெய்துவதோடு, அவர் மேலும் பல்வேறு உயர்வுகளும் சிறப்புகளும் எய்த எல்லாம்வல்ல இறையருளை இறைஞ்சி வாழ்த்தி நிற்கின்றோம்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சமூகம்.

(9266)

## கேள்வி கோரல்

எமது சங்கத்தின் பாவனையில் உள்ள பஜாஜ் மூன்று சில்லு பிக்கப் மொடல் ஓட்டோ வாகனம் இல. 39-1272 விற்பனை செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்வாகனத்தை திங்கள் முதல் வெள்ளிவரை உள்ள நாள்களில் மாலை 2.00 மணிமுதல் 5.00 மணிவரை கீழ்க்காண் விலாசத்தில் பார்வையிடலாம்.

**கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி**
**15.10.2002 ந.ப. 12.00 மணி**

**கேள்விப் பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதி**
**16.10.2002 ந.ப.12 மணி**

**கேள்விப் பத்திரங்கள் திறக்கும் இறுதித் திகதி**
**16.10.2002 பி.ப.1 மணி**

மேலும் விவரங்களை கேள்விப் பத்திரத்துடன் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 250/= செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.நா.இராசகுரு**
பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய். (சி-24160)


## வட்டியில்லா இலகுதவணை வசதி.

GUDWIL

# இதோ!

உங்களுக்கோர் அரியசந்தர்ப்பம்

55% ஐ மட்டும் செலுத்தவும்.



மிகுதி 18 மாத இலகு தவணை முறையில்.

மேலதிக விபரங்களுக்கு



இல. 55, துட்டுகெமுனு வீதி,
பாமன் கடை., தெகிவளை.
தொ.பே. 818415, 074 208101.
பெக்ஸ். 818416, 074 208102.



E-Mail. Gudwil@eureka.lk
gudwil@slt.net.lk

# அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்

யா/ஆனைக்கோட்டை பாலசுப்ரமணிய வித்தியாலய
ஆசிரியை



## செல்வி தவமணிதேவி கனகசபை

அவர்கள் 12.10.2002இல்
யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள
பட்டமளிப்பு விழாவில்
"முதுகல்விமாணி"
பட்டம் பெறுவதையிட்டும் தனது சேவையில் வெள்ளி விழா காண்பதையிட்டும் அகமகிழ்ந்து பாராட்டுவதுடன், மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று குடும்பத்தில் சீருஞ்சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள்,*
*மாணவர்கள்.*
(9218)

---



கட்டுவனைச் சேர்ந்தவரும், சிறந்த சமூக சேவையாளரும்,
விளையாட்டு வீரரும், தமிழபிமானியுமான
ஓய்வுபெற்ற நில அளவை உதவி அத்தியட்சகர்

## உயர்திரு.வல்லிபுரம் சின்னத்துரை அவர்கள்

யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம்
பெற்றமைக்கான

## பாராட்டு விழா

*இடம்:* இணுவில் மஞ்சத்தடி கிராம முன்னேற்றச் சங்க மண்டபம்
*(மஞ்சத்தடி முருகன் கோயில் அருகில்)*
*காலம்:* 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
*தலைவர்:* திரு.ச.விநாயகமூர்த்தி
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட போதனாசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)
*வரவேற்புரை:* திரு.க.தர்மநாயகம்
(பொருளாளர், யாழ்.மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம்)
*பாராட்டுரை வழங்குவோர்:*
திரு.மாவை.சேனாதிராசா (யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்)
திரு.சி.வ.மகாலிங்கம்
(உதவிப் பணிப்பாளர், இந்து கலாசார அலுவலகள் அமைச்சு)
திரு.வ.கிருஷ்ணசாமி (யாழ்.மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர்)
திரு.பெ.கனகசபாபதி (தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை)
திரு.சி.சிவமகாராஜா (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
திரு.த.மகாசிவம் (பொதுச் செயலாளர், இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம்)
திரு.ஆ.சி.நடராஜா (ஓய்வுபெற்ற அதிபர்)
திரு.சி.தட்சிணாமூர்த்தி (கிராம உத்தியோகத்தர், மயிலிட்டி தெற்கு)
திரு.க.த.பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற பொறியியலாளர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)
வைத்திய கலாநிதி க.சிதம்பரநாதன் (அரசினர் வைத்தியசாலை, கிளிநொச்சி)
*நன்றியுரை:* திரு.சபா.சிவலிங்கம்
(அதிபர், பிரமந்தனாறு மகா வித்தியாலயம், கிளிநொச்சி)

*-கட்டுவன், மயிலிட்டி தெற்கு, வறுத்தலைவிளான் மக்கள்.*
(9260)

---

இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் பராமரிப்பு வேலைகளைச் செய்யும் பொருட்டு குறிப்பிட்ட தினங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்தின் முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம்.

| திகதி, நேரம் | இடங்கள் |
|---|---|
| 12.10.2002 காலை 9.00 - பி.ப.4.00 | மல்லாகம் பிரதேசம் மட்டும் |
| 19.10.2002 காலை 9.00 - பி.ப.4.00 | ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், செம்மணி, திருநெல்வேலி. |
| 26.10.2002 காலை 9.00 - பி.ப.4.00 | மருதனார்மடம், இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, கோம்பையன்மணல், ஆனைக்கோட்டை, நவாலி. |
| 02.11.2002 காலை 9.00 - பி.ப.4.00 | புன்னாலைக்கட்டுவன், அச்சுவேலி, வடமராட்சி, குளப்பிட்டி, ஆனைக்கோட்டை, நவாலி. |
| 09.11.2002 காலை 9.00 - பி.ப.4.00 | உரும்பிராய், கோண்டாவில், பொற்பதி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், யாழ்.மாநகரசபைப் பகுதி. |
| 16.11.2002 காலை 9.00 - பி.ப.4.00 | கந்தரோடை, சண்டிலிப்பாய், சங்கானை, வட்டுக்கோட்டைப் பகுதி, பண்டத்தரிப்பு, மூளாய். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றேன்.

பிரதேச மின் பொறியியலாளர்
*இலங்கை மின்சார சபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம்,*
*மல்லாகம்.*

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
**இலங்கை மின்சார சபை.**
(C/24245)

---

## ஆனையிறவுக் கடலில் மீண்டும் மீன்பிடி

தென்மராட்சி,ஒக்.11

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஆனையிறவுக் கடலில் மீன் பிடிக்கப்படுகிறது. இக்கடலில் பிடிக்கப்படும் மீன்கள் சாவகச்சேரிச் சந்தைக்குக் கொண்டுவரப்படுகின்றன.

ஆனையிறவு முகாமையண்டிய இக்கடலேரியில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்து, இக்கடலில் போடப்பட்டிருந்த முற்கம்பிகள் அகற்றப்பட்ட பின்னர் படகுகளில் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## கட்டாக்காலிகளின் உரிமையாளரிடம் குற்றப்பணம் அறவீடு

சண்டிலிப்பாய்,ஒக்.11

மானிப்பாய் மேற்குப் பகுதியில் பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் நுழைந்து அங்கு பயிரிடப்பட்டிருந்த பயிர் வகைகளை மேய்ந்த கட்டாக்காலி மாடுகள் மூன்றின் உரிமையாளர்களுக்கு தலா 500 ரூபா வீதம் குற்றப்பணம் விதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளில் இருந்து இரவுவேளையில் இப்பகுதிக்குக் கட்டாக்காலியாக மாடுகள் வருவதாக விவசாயிகள் சம்மேளனம தெரிவித்தது. நெல் விதைப்பு ஆரம்பமாகிவிட்டதால் இனிமேல் தங்கள் கட்டாக்காலி ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்கவேண்டும் என்றும் இவை பிடிக்கப்படும் பட்சத்தில் குற்றப்பணம் அறவிடப்படும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது. இதேவேளை - வழுக்கையாற்றுப் படுக்கைக் கரையோரங்களில் மாடு, ஆடுகளைக் கட்டி மேயவிட வேண்டாம் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதாக விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் இ.பொ.ம.க. முதலியார் தெரிவித்தார். (ஓ-135)

---

## ஏல விற்பனை

வெற்றுக்கொள்கலன் ஒன்று எதிர்வரும் (19.10.2002) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும். ஏலம் எடுப்பவர்கள் முழுப் பணத்தையும் உடனே செலுத்திப் பொருளையும் உடனே அப்புறப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

*அரசினர் பொது வைத்தியசாலை,*
*யாழ்ப்பாணம்.* (C/24152) - பணிப்பாளர்.

---

## மணி மனமகிழ்வடைகிறான்



எமது நிறுவனத்தின் "அளவையியல்" ஆசிரியரும்,
யா/இந்து மகளிர் கல்லூரி ஆசிரியருமான

### உயர்திரு.ப.கமலதாஸன்

B.A.(Cey.), SPL. TRD. COM., Dip. in Mgt (O.U.S.L.)

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் 22ஆவது பட்டமளிப்பு விழாவில் "கலைமாணி" பட்டத்தினைப் பெறுவதையிட்டு பெருமகிழ்வடைவதோடு, அவர் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகிறோம்.

- A/L 2003 மாணவர்கள்

**மணி கல்வி நிறுவனம் - வேலணை.** (9271)

---

## ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்

### யா/யூனியன் கல்லூரி

நாளை (12.10.2002) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறும் எமது கல்லூரி ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*முதுகல்விமாணிப் பட்டம்பெறும்*
**திரு.இ.சண்முகேஸ்வரன** B.Sc., Dip.in.Ed., M.Ed.
அவர்களையும்
*பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டம்பெறும் ஆசிரியர்களான:*
**திரு.அ.தயாபரன்** B.Sc., Dip.in Ed.
**செல்வி ச.பிறேமா** B.Com., Dip. in Ed.
ஆகியோரையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*யா/யூனியன் கல்லூரி,*
*தெல்லிப்பழை.* (9262) - அதிபர், ஆசிரியர்கள்.

---

# தேசிய சேமிப்பு வங்கியின்
## கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்

| | |
|---|---|
| ☆ நிலையான வைப்புக்கள் | |
| 24 மாத வைப்பு | 10.5% |
| 12 மாத வைப்பு | |
| (i) வருட வட்டி | 10% |
| (ii) மாத வட்டி | 9.6% |
| 06 மாத வைப்பு | 9.8% |
| 03 மாத வைப்பு | 9.6% |
| ☆ சேமிப்புக் கணக்குகள் | |
| "ஹப்பன்/புஞ்சி ஹப்பன்" கணக்குகள் (18 வயதிற்கு உட்பட்டோருக்கான கணக்கு) | 7.8% |
| "இத்துரு மித்துரு" சேமிப்புக் கணக்கு (ரூ.5000/=இற்கு மேற்பட்ட வைப்பு) | 7.3% |
| "இத்துரு மித்துரு" சேமிப்புக் கணக்கு (ரூ.5000/=இற்கு உட்பட்ட வைப்பு) | 6.8% |
| "ஸ்திரி" பெண்களுக்கான சேமிப்புக் கணக்கு (ரூ.10,000/= இற்கு மேற்பட்ட தொகைக்கு 2% போனஸ் உண்டு) | 6.3% |
| சாதாரண சேமிப்புக் கணக்கு | 6.3% |

ஏதாவதொரு சேமிப்புக் கணக்கில் 31.12.2002ஆம் திகதிக்கு முன்னர் ரூ.25,000/= அல்லது அதன் மடங்குகளில் வைப்புச் செய்து 6 மாதங்களுக்கு அதனை மீளப்பெறாவிடின் ரூ25,000/= இற்கு ஓர் இலக்கம் என்ற அடிப்படையில் அவர்கள் சீட்டிழுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

| | |
|---|---|
| *முதலாம் பரிசு* | ரூ.50 லட்சம் பெறுமதிவாய்ந்த அழகிய வீடு |
| *இரண்டாம் பரிசு* | ரூ.5 லட்சம் பணப்பரிசு |
| *மூன்றாம் பரிசு* | ரூ.50,000 விதம் 5 பேருக்கு |

NSB
உங்கள் குடும்ப வங்கி
(சி-24121)

முகாமையாளர்
தேசிய சேமிப்பு வங்கி
யாழ்ப்பாணம்.

---



உ

சாவகச்சேரி - வாரிவனேஸ்வரம்

**கௌரிகாப்பு வழிபாடு**

15.10.2002 செவ்வாய் பிற்பகல் 2மணிமுதல் தினசரி அமிர்தபாஷிணி அம்பாளுக்கும் தலவிருட்சம் இத்தி, சிவனுக்கும் நிகழ்வுறும்.

இ.கருணாகரன்
*(தர்மகர்த்தா)*

(9305)

கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்
*சாவகச்சேரி.*

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். அரசாங்க அதிபராகக் கடமை ஏற்றிருக்கும்

**உயர்திரு.செல்லையா பத்மநாதன்**

அவர்களின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

ச.தி.கிருஷ்ணதாஸ் குடும்பம்
பிறப்பு, இறப்புப் பதிவாளர்,
நெடுந்தீவு - 14

(C/24166)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 - 12 - 1939



மறைவு
15 - 10 - 1999

*திதி* : 11.10.2002

## அமரர் ஆறுமுகம் கமலநாதன்

(B.A., Dip. in. Edu., S.L.P.S. Grade - I)

(முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயம்)

நீங்கள் எங்களுடன் இருந்தபோது நிமிர்ந்து நின்றோம்
உங்களை இழந்தபோது கலங்கி நின்றோம்
காற்றினிலே கலந்த உங்கள் உயிர்மூச்சு
இன்னும் எங்கள் நெஞ்சினிலே வீற்றிருந்து வீசுகிறது!

*என்றும் உங்கள் நினைவுடன்:*
அன்பு மனைவி,
மருமகன் : சந்திரன்,
மச்சான்மார், மச்சாள்மார்,
சகலன்மார், பெறாமக்கள்.

திருமதி சர்வேஸ்வரலலிதா
கமலநாதன்
*தொக்குவில் மேற்கு, கொக்குவில்.*

(9307)

## *யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்*

### தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேறு - 2002

| | |
|---|---|
| செல்வி சுகுமார் தரண்யா | - 143 |
| செல்வன் செந்திநாதன் சுஜீவன் | - 140 |
| செல்வி சகாதேவன் இந்துசா | - 137 |
| செல்வன் சிவபாலசிங்கம் ரவிச்சந்திரன் | - 118 |

எமது பாடசாலைக்கும், பெற்றோருக்கும் புகழ் சேர்த்த இம்மாண வர்களையும், வெட்டுப்புள்ளியை அண்மித்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(C/24169)

# மரண அறிவித்தல்கள்

## அமிர்தலிங்கம் இராசையா

(மலாயன் கபே முகாமையாளர்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட யாழ்ப்பாணம் மலாயன் கபே முகாமையாளர் அமிர்தலிங்கம் இராசையா அவர்கள் 08.10.2002 செவ்வாய்க்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், திருமதி சின்னையா மங்கையர்க்கரசி, சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும், ஆனந்தி(கொழும்பு), ஜெயந்தி(கனடா), தவராஜா(கனடா), வசந்தி(டென்மார்க்), ராஜ்குமார்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தணிகாசலம் (நியூ லஷ்மி ரேட்சென்ரர் - கொழும்பு), அபயன், ரவிசங்கர், தவாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும், காண்டீபன், தர்ஷிகா, கம்சனா, கார்த்திகா, அனுசிகா, அனோஜன், கோசிகா, ரிஜி, பிரியங்கா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 79/5, W.A சில்வா மாவத்தை, வெள்ளவத்தையில் வியாழக்கிழமைவரை வைக்கப்படும். பின்னர் சனி, ஞாயிறு இரு தினங்கள் ஜெயரத்தின மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கனத்தை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு விலாசம்:*
*எஸ்.தணிகாசலம்,*
*79/5, W.A. சில்வா மாவத்தை,*
*கொழும்பு-06. - T.P. 01-508490*

தகவல்:
மலாயன் கபே நிர்வாகம்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(9309)

## செபஸ்ரியாம்பிள்ளை காணிக்கைமரியை

குருநகரைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை காணிக்கைமரியை 09.10.2002 புதன் கிழமை வவுனியாவில் காலமாகிவிட்டார். இவரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
செ.மரியதாசன்
(மகன்)

*நாவாந்துறை* (9304)

## நாவாந்துறையில் மக்கள் சிரமம்

குருநகர்,ஒக்.11

நாவாந்துறை கடற்கரை வீதியில் அமைந்துள்ள பல வீடுகளில் படையினர் தொடர்ந்து தங்கியிருப்பதை அடுத்து வீட்டு உரிமையாளர்கள் நாவாந்துறையிலுள்ள சனசமூக நிலையங்களிலும், நாவாந்துறை மகளிர் மன்ற கட்டடங்களிலும் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

படையினரை அங்கிருந்து வெளியேற்றி வீடுகளில் மக்களை மீளவும் குடியமர அனுமதிக்குமாறு போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் நாவாந்துறையிலுள்ள பொது அமைப்புக்கள் மற்றும் நாவாந்துறை கொட்டடி பொது அமைப்புக்களின் ஒன்றியம் மூலம் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், படையினர் இதுவரை அங்கிருந்து வெளியேறவில்லை.

தனித்தனி வீடுகளில் வாழ்ந்த இந்தக்குடியிருப்பு மக்கள் பல குடும்பங்களாக சேர்ந்து குறுகிய இடங்களில் வாழ்ந்து வருவதனால் சுகாதார சீர்கேடுகளும், வசதிக்குறைவும் ஏற்பட்டுள்ளது எனக்கூறப்பட்டது.(எ-51)

## அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.11

அனுமதி இன்றி மதுபான விற்பனையில் ஈடுபட்டமை மற்றும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் மதுபானம் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் இருவருக்கு யாழ். நீதிமன்றினால் 4ஆயிரத்து 150ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

யாழ்.நான்காம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த வெலிச்சோர் ஜேம்ஸ் மரியதாஸ் என்பவருக்கு ஆயிரத்து 150 ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

பருத்தித்துறை வீதி, கல்வியங்காட்டைச் சேர்ந்த செல்லத்துரை லோகநாதன் என்பவருக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணமும், ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-5)

## டிப்ளோமா சான்றிதழ் பெறாதோருக்கு

அச்சுவேலி,ஒக்.11

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறியில் சித்தியடைந்து இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாத பட்டதாரி ஆசிரியர்களை நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தனலட்சுமி வில்வநாதன் அறிவித்துள்ளார். (ஒ-11)

## கூட்டுறவு முகாமையாளர் மாநாடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

கூட்டுறவு பொதுமுகாமையாளர் மாநாடு எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு கூட்டுறவு ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)


நியூட்டன்
உயர் கல்வி நிறுவனம்
ஆரியகுளம் சந்தி - யாழ்நகர்.

G.A.Q, B.A.I, B.A.Final
2002 - PAPER CLASS.
A/L - 2004, 2003 PAPER CLASS

| | | |
|---|---|---|
| வரலாறு | : | K.ஜெயக்குமார் |
| அரசறிவியல் | : | S.சுபாஸ்கரன் |
| அளவையியல் | : | P.கமல் - 2-3 |

ENGLISH PAPER CLASS
G.A.Q. 12-1
B.A.I 8-9
Sat.,Sun.

வெளிக்கள போதனாசிரியர்,
கிராம அலுவலர் G.S.
போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்பு

ஆரம்பம்:- 12.10.02 சனி-காலை 10மணி

படிவம்

வடக்கு - கிழக்கு மாகாணசபையில் சுகாதார சேவைத் திணைக்களத்தில் தமிழ்மொழிமூல மாணவ குடும்பநல உத்தியோகத்தர் (மருத்துவமாதர்) பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது.

முடிவு திகதி :- 05.11.2002

BHARATHI PATHIPPAKAM
OFF - SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
Phone : 021-3081
(C/24168)

TVS புன்னகையுடன் தொடரும் பயணங்கள்

TVS Victor More smiles per hour

இந்திய அரசின் நற்சான்றிதழ் பெற்றது

TVS victor விற்பனையில் தென்னாசியாவில் முதலிடம் - உலகில் முதலிடத்தை நோக்கி -



TVS XL Super
TVS Sport
TVS Champ
(ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் தேவையற்றது)




வாகனங்கள் பதிவுசெய்து 15 நாள்களுக்குள் இலக்கத் தகடு

விற்பனைக்குப் பிந்திய சேவையும் உத்தரவாதமும்

ஆகிய மோட்டார் சைக்கிள்களுக்கு நீங்கள் நாட வேண்டியது:

சுசுகி ரேடர்ஸ்



57, 59, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/24159)

## நல்லூர்ப் பிரிவுக்கு 43 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஒக்.11

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியாக புனர்வாழ்வு அமைச்சினால் 43 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சமூகவள அபிவிருத்தி, வீதிகள் புனரமைப்பு, கல்வி மேம்பாடு, சுகாதாரம், சமூகநலப் பண்பாடு ஆகிய திட்டங்களுக்கே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. என நல்லூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-180)

## இந்திய மீனவர் கைதாகினர்

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களை தலைமன்னார் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர்.

கடற்படையினர் கடந்த திங்கட்கிழமை இவர்களைக் கைதுசெய்து நேற்றுமுன்தினம் தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

தாம் அத்துமீறி மீன்பிடிக்கவில்லை எனவும், கடந்த சனிக்கிழமை காணாமற்போன தமது இயந்திரப் படகைத் தேடியே இலங்கைக் கடற்பரப்பில் தாம் பிரவேசித்ததாகவும் இந்திய மீனவர்கள் கூறியுள்ளனர். (ஒ-ரி)

## தமிழகத்திலிருந்து 133 குடும்பங்கள்

மன்னார்,ஒக்.11

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை 133 குடும்பங்களைச் சேர்ந்த 260 பேர் தமிழகத்திலிருந்து தலைமன்னார் வழியாக நாடு திரும்பியுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் நாடு திரும்பும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக மன்னார் மாவட்ட அரச அதிபர் விஸ்வலிங்கம் தெரிவித்துள்ளார். அவர்களுக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-ரி)

## விதை கிழங்கு தேவையானோர் விண்ணப்பிக்கலாம்

வலி.தெற்கு,ஒக்.11

உடுவில் கமநல கேந்திர நிலையத்தினரால் விவசாய சங்கங்களினூடாக விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்குகள் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன.

விதை உருளைக்கிழங்கு தேவையான விவசாயிகள் தத்தம் பகுதி விவசாய சங்கத்தினூடாகத் தமது பெயர்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு உடுவில் கமநல கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் வி.இளங்குமரன் அறிவித்துள்ளார்.

குப்பிளான், புன்னாலைக்கட்டுவன், ஈவினை, இணுவில் கிழக்கு பிரதேசங்களிலிருந்து இதுவரை ஆயிரத்து 170 பெட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் - அவர் தெரிவித்துள்ளார். (ஒ-152)

## நாய்களால் விபத்து அபாயம்

புன்னாலைக்கட்டுவன்,ஒக்.11

பிரதான வீதிகளில் கட்டாக்காலி நாய்களால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் நிலவிவருகின்றது. பொதுவாக பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, உரும்பிராய் போன்ற பிரதேசங்களில் அதிகாலையில் கட்டாக்காலி நாய்களால் சந்தைக்குச் செல்லும் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். (ஒ-133)

## இடைக்காட்டில் செயற்கைமுறை சினைப்படுத்தல்

அச்சுவேலி,ஒக்.11

இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையத்தில் பிரத்தியேக செயற்கைமுறைச் சினைப்படுத்தல் சேவை வாரத்தில் 6 தினங்களும் நடைபெறுகின்றது.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் ஆகியோரின் வசதியைக் கருத்திற்கொண்டு கால்நடைகளைச் செயற்கைமுறையில் சினைப்படுத்துவதற்கு உரிய வசதிகள் இங்கு செய்யப்பட்டிருப்பதாக கோப்பாய்ப் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி செ.விளோசந்தர் அறிவித்துள்ளார்.

(ஒ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கௌரவ செயலாளரும், ஊர்காவற்றுறைப் பிரிவின் தலைவருமாகிய

**திரு.சோ.விக்னேஸ்வரன்** அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் தெரிவுசெய்து, இன்று யாழ். நீதிமன்றில் சத்தியப்பிரமாணம் செய்வதையிட்டு பாராட்டுவதுடன், அவரது சேவைகள் மேன்மேலும் உயர வாழ்த்துகின்றோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை.

(C/24165)

## கண்ணீர் அஞ்சலி

எமது சபை ஊழியர் திரு.வ.சிவராசா அவர்களின் அன்பு மனைவி

**திருமதி சி.சுகந்தி** அவர்களின்

திடீர் மரணத்தினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை
ஊழியர் நலன்புரிச்சங்கம், ஊர்காவற்றுறை.

(C/24163)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 08 - 1921



மறைவு 11 - 10 - 2000

அமரர்
**டானியல் முருகேசு வேதநாயகம்**

*(இளைப்பாறிய சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்)*

*'சாவின் இருள் சூள் பள்ளத்தாக்கில்*
*நான் நடக்க நேர்ந்தாலும்,*
*நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்'*

திருப்பா: 23:4

*வதிரி,*
*கரவெட்டி.*

*பிரிவால் துயருறும்:* குடும்பத்தினர்.

(9298)

## பட்டமளிப்பு விழாவில் ஸ்ருடியோ(உள்ளக) புகைப்படம் பிடித்தல்


யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவினையொட்டி நாளை (12.10.2002) சனிக்கிழமை வளாகத்தினுள் விரும்பிய அளவுகளில் கறுப்பு - வெள்ளை மற்றும் கலர்ப் படப்பிடிப்பிற்கான உள்ளக ஸ்ருடியோ கலைக்கூடமொன்று எமது ஒன்றியத்தினால் (கொனிக்கா கலர் லாப்) சிறி டிஜிற்றல் கலர் லாப் ஸ்தாபனத்தாருடன் இணைந்து ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

முகாமைத்துவ கற்கைகள்
வணிகபீட மாணவர் ஒன்றியம்.

யாழ்.பல்கலைக்கழகம்.

(9296)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



## உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2104874 இருந்து
2122962 வரை
சீட்டிழுப்பு இல. 1339
திகதி 09.10.2002



### வெற்றி எண்கள்

**03 13 20 32 46**

போனஸ் எண் **26**

### ஜக்பொட் பரிசு

**ரூபா.2,366,450/-** வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,366,450/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 119 | 10,000/- | 1,190,000/- |
| 3 | 5,649 | 500/- | 2,824,500/- |
| 2 | 92,345 | 20/- | 1,846,900/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 112,617 | 10/- | 1,126,170/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,187,570/-

### இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

**ரூபா. 3,239,250/-**

தொடர் இல. 3102200க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 12ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள் –

2108175-4-04
2106354-2-01
2108211-3-84
2110674-4-72
2105421-1-55

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

# பெற்றோரை இழந்த அநாதைச் சிறுவன் சுயமாகக் கட்டியெழுப்பிய சாம்ராஜ்யம்

## 13 நிறுவனங்களுக்கு இன்று தயா கமகே உரிமையாளர்

**வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர்**

**ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 08ஆம் திகதி தோன்றி தனது பால் மணம் மாறாப் பருவத்திலேயே பெற்றோரை இழந்து பரிதவித்து கடும் உழைப் பினால் ஒரு தொழில் சாம்ராஜ்யத்தையே நிறுவிய தயா கமகே தனது சாதனைகளை விளக்கினார்.**

**குழந்தைப் பருவத்திலேயே தமது பெற்றோரை இழந்த தயா கமகே, தற்போது 13 நிறுவனங்களிற்கு அதிபராக இருக்கிறார். கட்டட நிர்மாணம், ஆடைத்தொழில், சீனித்தொழிற்சாலை என்று மூன்று துறைகளில் கொடிகட்டிப் பறக்கிறார்.**

**கடனுக்கு பொருள்களை வாங்கி சிறிய ஹோட்டல் ஒன்றை ஆரம்பித்த தயா கமகே, தற்போது அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் ஹொங் கொங் ஆகிய நாடுகளில் தொழில் காரியாலயங்களை திறந்திருக்கின்றார்.**

**கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில், ஆரம்பக் கல்வியைக் கற்ற தயா கமகேக்கு குடும்பப் பொறுப்புக் காரணமாக உயர் கல்வியைத் தொடரமுடியாது போனாலும் இன்று தனது தொழிலில் சாதனை படைத்திருக்கின்றார். இவரது திறமையை இனங்கண்டு 1997இல் சிறந்த வர்த்தகருக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.**

**அதிக சர்ச்சைக்குரிய செவனகல சீனித் தொழிற்சாலையைக் கொள்வனவு செய்து துணிவுடன் அதனை முன்னேற்றிச் செல்கிறார்.**

**4 ஆயிரம் ஊழியர்களுடன் பல தொழிற்சாலைகளை நடத்தும் தயா கூட்டு நிறுவனங்களின் அதிபதி தயா கமகே தனது வெற்றிப்பாதை தொடர்பாக விளக்கமளிக்கிறார்.**

**தொலைக்காட்சியில் தயா கமகேயை அறிவிப்பாளர் சமுதிக சமர விக்கிரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.**

*கேள்வி:* கட்டட நிர்மாணத்துறையில் தொழிலை ஆரம்பித்த நீங்கள் செவனகல சீனித் தொழிற்சாலையை கொள்வனவு செய்தீர்கள். அதுமட்டுமல்லாமல் ஆடைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளீர்கள். வர்த்தகத்துறையில் இந்த அளவிற்கு உயர்ச்சி பெற உங்களுக்கு உந்துசக்தியாக இருந்த காரணிகள் எவை?

*பதில்:* எனது தந்தை கல்முனையில் தனது தொழிலை ஆரம்பித்தார். பிரச்சினைகள் காரணமாக 1958இல் அம்பாறைக்கு தொழிலை மாற்றிக் கொண்டார். மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை, பேராதனை மருத்துவ பீடம் மற்றும் திருகோணமலை ரயில் நிலையம் போன்ற பெரிய கட்டட நிர்மாணப் பொறுப்புகளை எனது தந்தை பொறுப்பேற்று செய்தார். அவர் நிர்மாணத் துறையில் நீண்டகாலமாக ஈடுபட்டு வந்தார்.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக 1963இல் தந்தை உயிரிழந்துவிட்டார். அப்போது எனக்கு 3 வயது, அதைத் தொடர்ந்து 1967இல் எனது தாயும் இறந்துவிட்டார்.

அதன் பின்பு சிறிய தந்தையின் பராமரிப்பிலேயே நாம் வளர்ந்தோம். அவரும் 1975இல் உயிரிழந்துவிட்டார். அப்போது நான் சாதாரணதரப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். எனக்கு ஐந்து சகோதர, சகோதரிகள் இருக்கிறார்கள்.

1977இல் எனது மூத்த சகோதரருடன் இணைந்து அம்பாறையில் எமது தந்தைக்கு சொந்தமாக இருந்த ஹோட்டல் ஒன்றை செயற்படுத்த ஆரம்பித்தோம். அப்போது ஏனைய சகோதரர்கள் அனைவரும் படித்துக் கொண்டிருந்தனர்.

நாம் 77 ரூபா மட்டுமே வைத்துக் கொண்டு வியாபாரத்தை ஆரம்பித்தோம். அதிகமான பொருள்களை கடனுக்கே வாங்கினோம். அதன்பின் 1984இல் எனது மூத்த சகோதரரும் இறந்துவிட்டார். அப்போது குடும்பச் சுமை முழுமையாக என்மீது சுமத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து எனது தந்தை விட்டுச் சென்ற கட்டட நிர்மாணத் தொழிலில் ஈடுபட ஆரம்பித்தேன். படிப படியாக எனது தொழிலை வளர்த்துக் கொண்டேன். ஒவ்வொரு வருடமும் இலாபத்தை அதிகரிக்கச் செய்தேன்.

பின்பு 1987இல் 'தயா' கட்டட நிர்மாண தனியார் நிறுவனத்தை ஆரம்பித்தேன். 1992இல் உள்நாட்டு நிர்மாண கம்பனி ஒன்று என்ற வகையில் முதன் முதலாக உலக வங்கியின் அனுசரணையுடனான நிர்மாணம் ஒன்றைப் பொறுப்பேற்றேன்.

அதைத் தொடர்ந்து காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாஸ ஆரம்பித்த ஆடைத் தொழிற்சாலை வேலைத் திட்டத்தின்கீழ் அம்பாறையில் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தேன். அந்தத் தொழிற்சாலைகளை மேலும் விரிவுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் எனது தொழிற்சாலைகளையும் விரிவுபடுத்தினேன்

1996இல் கிழக்கு மாகாணத்தின் சிறந்த வர்த்தகராக தெரிவு செய்யப்பட்டேன். பின்பு 1997இல் ரீ.யூ.வை.பி. விருதைப் பெற்றேன். அதே வருடத்தில் அகில இலங்கை ரீதியில் சிறந்த வர்த்தகராகத் தெரிவு செய்யப்பட்டேன். எனது தந்தை ஒரு சிறந்த வர்த்தகராக இருந்தவர். நானும் அந்த இடத்துக்கு வரவேண்டுமென்ற ஆசை எனக்கு இருந்தது. இந்த விருதுகளைப் பெற்றுக்கொண்ட போது எனது கனவு நனவாகிவிட்டதாக உணர்ந்தேன்.

அதன்பின்பு 'செவனகல சீனித் தொழிற்சாலை'யை அதிகூடிய விலையில் கேள்விப்பத்திரம் சமர்ப்பித்து கொள்வனவு செய்துகொண்டேன்.

*கேள்வி:* இளவயதில் வாழ்க்கையில் தனிமைப்படுத்தப்பட்ட போது அந்தச் சூழ்நிலையை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

*பதில்:* உண்மையைக் கூறுவதென்றால், நான் தனிமைப்படுத்தப்பட்ட போதுதான் எனக்கு அதிக பலம் கிடைத்தது.

*கேள்வி:* அது இலகுவான காரியமல்ல என்பது புரிகிறது. தொழில் வளர்ச்சிக்கு கல்வி அத்தியாவசியமானது என்று நினைக்கிறீர்களா?

*பதில்:* கல்வி அவசியமான தொன்று. ஆனால், துரதிர்ஷ்டவசமாக எனது கல்வியைத் தொடரமுடியாது போனது. ஆனால், எனது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்குவேன்.

*கேள்வி:* உங்களது குழந்தைகள் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்கிறார்களா?

*பதில்:* இல்லை. அவர்களுக்கு தற்போது தான் 14 வயது ஆகிறது.

*கேள்வி:* நீங்கள் உயர்கல்வியைத் தொடராவிட்டாலும் வர்த்தகத்துறையில் சிறப்பாக முன்னேறியுள்ளீர்களே?

*பதில்:* நான் உயர்கல்வியைக் கற்றிருந்தால் எனது பணி இதைவிடச் சிறப்பாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன்.

*கேள்வி:* இலங்கையிலிருக்கும் கல்வி முறைமூலம் வர்த்தகத்துறைக்குரிய பங்களிப்பைச் செய்ய முடியுமென நினைக்கிறீர்களா?

*பதில்:* எனது நிறுவனங்களில் பட்டதாரிகள் பலர் வேலை செய்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் இவர்களால் நடைமுறைக்கேற்ப தமது புத்தக அறிவைப் பயன்படுத்த முடியாது போகிறது என்பது உண்மைதான். ஆனாலும், எமக்குள்ள நடைமுறை அறிவுடன் அவர்களின் புத்தக அறிவையும் சேர்த்துக்கொண்டு எமது தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

*கேள்வி:* உங்களது பிள்ளைகளுக்கும் வியாபாரத்துறையில் பயிற்சி கொடுப்பீர்களா? அதாவது பயிற்சித் தொழிலாளர்களாக பிள்ளைகளை உங்களது கம்பனியில் சேர்த்துக் கொள்வீர்களா?

*பதில்:* ஓ... அது ஒரு, நல்ல யோசனை. நடைமுறைப்படுத்தலாம் என்று நினைக்கிறேன்.

*கேள்வி:* இவ்வாறான நடைமுறைக் கல்வி முறைகள் வெளிநாடுகளில் உள்ளன. அவற்றை நாமும் அறிமுகப்படுத்தினால் சிறந்த தொழில் அபிவிருத்தியைக் காணலாம். அது சரி. நீங்கள் தற்போது 13 நிறுவனங்களுக்கு அதிபதியாக இருக்கிறீர்கள். அந்த அனுபவத்தை வைத்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

*பதில்:-* மகாவலி அபிவிருத்தித் திட்டம் போன்றவை அறிமுகமான போதே உள்நாட்டு நிர்மாணத்துறையினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தால், இன்று வெளிநாட்டு நிர்மாண தொழிலாளர்களுக்கு வாய்ப்பே இருந்திருக்காது. உள்நாட்டு நிறுவனங்களால் செய்யக்கூடிய பல ஒப்பந்தங்கள் வெளிநாட்டு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன.

வெளிநாட்டவர்களைவிட குறைவான செலவில் எம்மால் வேலைத் திட்டங்களைச் செய்து முடிக்கமுடியும். நிர்மாணவேலைகளுக்கான அனைத்துப் பூர்வாங்க செயற்பாடுகளையும் மேற்கொள்பவர்கள் அரச ஊழியர்கள்தான். இவர்கள் உள்நாட்டு நிறுவனங்கள்மீது அதிக கவனம் செலுத்தவேண்டும். அதேபோல நான் செய்துவரும் இன்னுமொரு வியாபாரமான ஆடை ஏற்றுமதித் தொழிலை எடுத்துக்கொள்வோமாயின், அங்கு நாம் வெளிநாட்டு சந்தைகளுடன் போட்டிபோட வேண்டியிருக்கிறது. குறிப்பாக அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி காரணமாக நாமும் ஓரளவிற்கு பாதிப்படைந்துள்ளோம்.

அத்தோடு எமது உற்பத்திகளின் தரத்தை உயர்த்தவும் வேண்டியுள்ளது. சிறந்த விற்பனை முகாமைத்துவம் தேவைப்படுகிறது. இதற்கு அரசாங்கத்தின் உதவி கட்டாயம் தேவைப்படுகிறது. அது சரியாகக் கிடைத்தால் 2005ஆம் ஆண்டின் கோட்டா முடிவடைந்தாலும் அவற்றை மீண்டும் பெறக்கூடிய வசதி கிடைக்கும்.

*கேள்வி:* இது எவ்வாறு சாத்தியப்படும் என்று விளக்குவீர்களா?

*பதில்:* உங்களுக்கு ஓர் உதாரணம் கூறுகிறேன். வாடிக்கையாளர் ஒருவரை நான் இங்கிலாந்திலிருந்து அழைத்துக்கொண்டு வந்து கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கவைத்தேன். அவரை அடுத்தநாள் அம்பாறைக்கு அழைத்துச் செல்ல உத்தேசித்திருந்தேன். ஆனால், அந்த ஹோட்டலில் இருந்தவர்கள் அவரைப் பயமுறுத்திவிட்டனர். அம்பாறைப் பகுதியில் பயங்கரவாதப் பிரச்சினைகள் இருக்கின்றன என்று கூறிவிட்டார்கள். பின்பு வாடகைக்கு ஒரு விமானம் எடுத்து அவரை அம்பாறைக்கு அழைத்துச் சென்றேன். அந்த வாடிக்கையாளர் மூலம் எமக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

நாம் ஜேர்மனியிலும், ஹொங் கொங்கிலும் எமது காரியாலயங்களைத் திறந்திருக்கிறோம். அமெரிக்காவிலும் வேறு இரு நிறுவனங்களுடன் இணைந்து காரியாலயத்தைத் திறந்திருக்கிறோம். இவற்றின் மூலம் மேலும் வாடிக்கையாளர்களைப் பெற்றுக்கொள்வதே எமது நோக்கம்.

இவ்வாறாக வாய்ப்புக்கள் ஏற்பட்டால் எமது தொழிலைச் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லலாம்.

*கேள்வி:* உங்களிடம் தற்போது எத்தனை பேர் தொழில் புரிகின்றனர்?

*பதில்:* 13 நிறுவனங்களில் 4000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். அம்பாறைத் தொழிற்சாலையில் ஆயிரம் பேர் இருக்கின்றார்கள்.

*கேள்வி:* உங்களது அனைத்துத் தொழிற்சாலைகளும் அம்பாறையில் அமைந்திருப்பதன் முக்கியத்துவம் என்ன?

*பதில்:* 1977ஆம் ஆண்டு அம்பாறையில்தான் எனது முதலாவது தொழிற்சாலையை ஆரம்பித்தேன். அம்பாறை எனது சொந்த ஊராக இல்லாத போதும், எனது தந்தையும் அவரது தொழிலை அங்குதான் ஆரம்பித்தார். அம்பாறைக்குச் சென்றவுடன் எனது சொந்த ஊருக்குப் போன உணர்வு ஏற்படுகிறது. அங்கிருக்கும் அப்பாவி விவசாயிகளுக்கு உதவி செய்யும்போது மனதில் ஏற்படும் திருப்தி அளப்பரியது.

*கேள்வி:* காலஞ்சென்ற ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ காலத்தில் உங்கள் தொழிலை நீங்கள் வளர்த்துள்ளீர்கள்தானே?

*பதில்:* ஆம். அது உண்மைதான. ஜனாதிபதி பிரேமதாஸ 77ஆவது ஆடைத் தொழிற்சாலை ஆரம்பித்ததைத் தொலைக்காட்சியில் பார்த்த போதுதான் நானும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென நினைத்தேன்.

அப்போது அரசாங்கத்தால் எனக்குக் கிடைத்த ஒத்துழைப்பு அதிக பயனுள்ளதாக இருந்தது. அப்போது இலங்கை வங்கிப் பொதுமுகாமையாளர் என்னுடன் சிறிது நேரம் கலந்தாலோசித்த பின்பு எனக்கு வேண்டிய கடன் தொகையை பெற்றுக் கொடுத்தார்.

அப்போது தொழிற்சாலைத் திட்டத்திற்கு பாஸ்கரலிங்கம்தான் பொறுப்பாக இருந்தார். அரச அதிகாரிகளை அவர் சிறப்பாக வழிநடத்தினார்.

எமக்குத் தேவையான அனைத்து சேவைகளுக்கும் நாம் பணம் செலுத்தினோம் என்பது உண்மைதான். ஆனால், அந்த சேவைகள் துரித வேகத்தில் எமக்கு செய்துகொடுக்கப்பட்டன. வறிய குடும்பங்களுக்கு வழங்கப்படும் 'ஜனசவிய'வில் செலவிடப்படும் பணம் ஆடைத் தொழிற்சாலைகளின் மூலம் அரசாங்கத்துக்கு கிடைக்கும் பணமாகும்.

*கேள்வி:* இவையெல்லாவற்றையும்விட மிகப் பாரிய சுமையொன்றை உங்களது தோள்களில் தற்போது சுமந்துகொண்டுள்ளீர்கள். அதுதான் செவனகல சீனித் தொழிற்சாலை. அது பற்றி சற்றுக் கூறுவீர்களா?

*பதில்:* ஆம். நாம் எதிர்பார்த்ததைவிட பாரிய சுமை. நான் அம்பாறைக்குச் சென்றபோது எதேச்சையாக ஏற்பட்ட ஒரு சந்தர்ப்பத்திலே இந்தத் தொழிற்சாலையை கொள்வனவு செய்தேன். அங்கு வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் வந்திருந்தார். ஆனால், அவர் உண்மையாகவே இந்த நிறுவனத்தை கொண்டு நடத்துவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கவில்லை. அப்போது தொழிற்சாலையை கொள்வனவு செய்யுமாறு தொழிலாளர்கள் என்னை வற்புறுத்தினர்.

அதன்பின்பு சீன வர்த்தகர் ஒருவருடன் இணைந்து தொழிற்சாலையைக் கொள்வனவு செய்தோம். அதன்பின்பு ஏற்பட்ட பிரச்சினை காரணமாக சீன வர்த்தகர் தனது பங்கை வாபஸ் பெற்றுக்கொண்டார். பின்பு நான் பெரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தேன். ஆனால், அதிர்ஷ்டவசமாக சம்பத் வங்கியும், செலான் வங்கியும் எனக்கு உதவின.

தொழிற்சாலைக்குள் பிரவேசிக்க முடியாதவாறு சில தொழிலாளர்கள் எம்மைத் தடுத்துவிட்டார்கள். இது உண்மையில் எனக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட ஓர் ஆர்ப்பாட்டம் அல்ல. அரசாங்கத்துக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டதென அறிந்தேன். இது எனக்கு ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டது. ஆனால், எனது அனுபவத்தின்மூலம் விவசாயிகளுக்கு நெருக்கமானேன்.

முதலில் கரும்பு உற்பத்தியில் ஈடுபட்டேன். சிறிதுகாலம் தொழிற்சாலைக்குச் செல்லாமல் இருந்தேன். நான் உண்மையில் வர்த்தக நோக்கத்துக்காக அல்லாமல் தொழிற்சாலையைக் கொண்டு நடத்துவதற்காகவே அதனைக் கொள்வனவு செய்தேன் என்பதனை தொழிலாளர்கள் புரிந்துகொண்டனர்.

*கேள்வி:* இது ஒரு பெரிய சவாலல்லவா?

*பதில்:* ஆம். இந்த சந்தர்ப்பத்தில் வேறு ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விவசாயத்தின்மூலம் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இலங்கையில் உள்ள நான்கு சீனித் தொழிற்சாலைகளும் நஷ்டத்தில் இயங்குகின்றன. ஆனால், இவற்றுக்கு, சரியான முகாமைத்துவம் ஏற்படுத்தப்படுமாயின் நாட்டில் நுகர்வு செய்யப்படும் சீனியில் 80 சதவீதத்தை நாம் உற்பத்தி செய்யலாம் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

இப்போது 90 சதவீதமான சீனியை நாம் இறக்குமதி செய்கிறோம். இதற்குப் பெருமளவு பணத்தையும் செலவிடுகிறோம்.

வெளிநாட்டுக்கு அநாவசியமாகப் பணத்தைச் செலவிடாமல் ஒரு வருடத்திற்கு ஒரு கொத்மலைத் திட்டத்தை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு எம்மிடம் பணம் இருக்கிறது.

*கேள்வி:* உங்களுக்குத் தேவையான ஒத்துழைப்புக் கிடைத்தால் அதைச் செய்யமுடியுமா?

*பதில்:* ஆம் முடியும். அதை நான உறுதியாகக் கூறுகிறேன்.

- இவ்வாறு கூறினார் தயா கமகே. ★

---

**யாழ்.பல்கலைக்கழக**

## உடற்கல்வி டிப்ளோமா 39பேர் சித்தியடைந்தனர்

யாழ்.பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா 2002 ஆண்டுக்கான இறுதியாண்டுப் பரீட்சைக்குத் தோற்றிய 56 மாணவர்களில் 39 பேர் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்த மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

எ.அனந்தன், எம்.டனிஸ்ரன் விஜயகுமார், செல்வி கே.கார்த்திகா, ஆர். குகன், செல்வி ரி.லோகநந்தினி, என. சஞ்சீவ், எஸ்.சாருசன், எம்.சசிகுமார், செல்வி ரி.ஷாமினி, ரி.சுதர்சன், எம். திவாகர், பி.ஜெயகரன். செல்வி பி.யாமினி, செல்வி ஏ.கார்த்திகா, ரி.கௌரிபாலன், ஜெ.ஜெயகாந்தன், பி.காந்தரூபன், செல்வி எஸ். மடோனா, கே.மதியழகன், செல்வி எம்.மோகனப்பிரியா, ரி.நாகநாதன், எஸ்.பிலிப் யூபால விலிங்ரன், ரீ.புஸ்பரத்தினம் - எம்றவி அன்ரனி, பி.சசிகரன், எஸ்.செல்வரதன், எஸ்.சிவதீபன், எஸ். சிறீதரன், ரி.சுஜிந்திரமோகன், கே. தவகாந்தன், செல்வி ரி.விஜிகலா, ரி. விமலன், பி.கஜேந்திரன், என்.தவகுமார், வி.ஜங்கரன், ஏ.தயாளன், கே. கனகராஜ், ஆர்.ரகுமார், ஆர்.சிவசேகரம்.

## திருக்கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ருப்பு, வீரமுனை, நிலாவணை, நற்பிட்டிமுனை, ஆலையடிவேம்பு, திருக்கோவில் பகுதிகளில் எந்தநேரத்திலும் எந்தகைய அசம்பாவிதங்களும் நிகழலாம் என்ற அச்சம் நிலவுகின்றது.

அப்பகுதிகளில் ஆங்காங்கே பிரதான வீதிகளுக்குக் குறுக்கே பாரிய மரக்குற்றிகள், கொங்கிறீற் தூண்கள் போடப்பட்டிருந்தன; ரயர்களும் எரிக்கப்பட்டன.

விசேட அதிரடிப்படையினரும் இடையிடையே வந்து வீதித் தடைகளை அகற்றிவிட்டுச் சென்றனர். ஆனால், பொதுமக்கள் மீண்டும் மீண்டும் வீதித்தடைகளை ஏற்படுத்திக் கொண்டே இருந்தனர். வீதித் தடைகளை அகற்றுவதில் படையினர், பொதுமக்களைப் பலாத்காரப் படுத்தியுள்ளனர். இதன்போது பொதுமக்கள் சிலரை படையினர் தாக்கியுள்ளனர். ஆங்காங்கே கூட்டங்கூட்டமாக நின்றிருந்த பொதுமக்களை சில மணி நேரம் கொடூர வெயிலில் முட்டுக்காலில் நிற்கவைத்துத் தண்டனை வழங்கினர். பெரிய அசம்பாவிதங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

கல்முனையில் வலயக் கல்வி அலுவலகம், மாநகரசபை உட்பட அனைத்து அரச அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகள், வங்கிகள் போன்றவையும் திறக்கப்படவில்லை. கல்முனை மாவட்ட நீதிமன்றமும் இயங்கவில்லை.

முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்டதும அவர்களின் வர்த்தகக் கேந்திர மையமாகக் கருதப்படுவதுமான கல்முனை நகரில் வர்த்தக நிலையங்கள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. கல்முனைப் பொதுச் சந்தையும் இயங்கவில்லை.

கல்முனையிலிருந்து அம்பாறை, அக்கரைப்பற்று, மட்டக்களப்பு போன்ற இடங்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் தென் கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில், சம்மாந்துறை வளாகங்கள் அம்பாறை, சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பன திறக்கப்பட்டபோதிலும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் வரவின்மையால் அவை இயங்கவில்லை.

மட்டக்களப்பு - கல்முனை, கல்முனை - அம்பாறை, கல்முனை - பொத்துவில் நெடுஞ்சாலைகளில் எவ்வித வாகனப் போக்குவரத்துக்களும் இடம்பெறவில்லை.

கல்முனைப் பகுதியில் படையினரும் பொலீஸாரும் வீதிகளுக்கு இறக்கப்பட்டுள்ளனர்; ரோந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அதிரடிப்படையினரின் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களின் சடலங்கள் அவரவரது வீடுகளுக்கு அனுப்பப்பட்டன. இறுதிக்கிரியைகள் நேற்று பெரும் பதற்றத்தின் மத்தியில் இடம்பெற்றன.

அதிரடிப்படையினரின் கொலை வெறித் தாக்குதலைக் கண்டித்து திருகோணமலையில் இன்று முழு அளவில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. திருகோணமலை பொது மக்கள் ஒன்றியம் இதற்கான அழைப்பை விடுத்து ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. (ஒ)

## தமிழீழப் பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்புலிகள் படையணி, ஆசிரியர் படையணி, தேசிய துணைப் படையணி, பொன்னம்மான் கண்ணிவெடி அகற்றும் படையணி, அன்பரசி படையணி, காவல்துறைப் படையணி, விக்ரர் கவச எதிர்ப்புப் படையணி ஆகியனவே இராணுவ அணிவகுப்பு நடத்தின. இந்த அணிவகுப்பு சுமார் ஒரு மைல் தூரம் நீண்டிருந்தது.

படையணிகளின் இராணுவ மரியாதையை கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, லெப்.கேணல் ஆண்டாள், லெப்.கேணல் விடுதலை, லெப்.கேணல் பவநிதி, லெப்.கேணல் தமிழ்ச்செல்வி, லெப் கேணல் அஜந்தி, லெப்.கேணல் கோதை, லெப்.கேணல் அஸ்வினி, லெப்.கேணல் காவேரி, லெப்.கேணல் சப்தகி மற்றும் காவல்துறைப் படையணியின் சார்பில் இமால் குலேத் ஆகியோர் ஏற்றனர்.

இந்த நிகழ்வில் புலிகளின் மூத்த தளபதிகள் பலர் கலந்து சிறப்பித்தனர். கேணல் சூசை, கேணல் சொர்ணம், கேணல் பானு, கேணல் தீபன், கேணல் ஜெயம், புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டம்மான், அரசியல்துறைத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வன், புலிகளின் பிரமுகர் ஜோய் மகேஸ்வரன் மற்றும் புலிகளின் மூத்த தளபதிகள், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் பங்குபற்றினர்.

மாலதி படையணி உருவாக்கிய 'வெஞ்சமரின் வரிகள்' என்ற பாடல் ஒலிப்பேழையை (சி.டி) புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி வெளியிட்டு வைத்தார். விமர்சன உரையை புலிகளின் மூத்த பிரமுகர் வி.பாலகுமார் நிகழ்த்தினார்.

நேற்றைய நிகழ்வில் கடற்புலிகளின் தளபதி சூசையும் உரையாற்றினார்.

மகளிர் படையணிகளின் இராணுவ அணிவகுப்பைத் தொடர்ந்து மன்னகுளம் முகாம் மீதான மாதிரித் தாக்குதல் நிகழ்வை படையணிகள் நிகழ்த்தின. அதனைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள், தளபதிகளின் உரைகள் ஆகியன இடம்பெற்றன.

இந்த நிகழ்வுகளைக் கண்டுமகிழ 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளில் இருந்தும் நிகழ்வுகளைக் கண்டுகளிக்க மக்கள் கூட்டங்கூட்டமாக வந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டும் 10ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கிளிநொச்சிக்கு வந்திருந்தனர்.

தமிழீழ பெண்கள் எழுச்சி நாளுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றிருந்த மக்கள் திரும்பி வரும்போது முகமாலைச் சோதனைச் சாவடியில் படையினரின் சோதனை இடம்பெறவில்லை. வாகனங்கள் சகிதம் மக்கள் யாழ்.குடாநாட்டுக்கு பிரவேசிக்க முகமாலைச் சோதனைச்சாவடியில் இருந்த படையினர் அனுமதி வழங்கினர்.

தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வுகளை 'புலிகளின் குரல்' வானொலி நேற்று மாலை 3 மணி முதல் இரவு 7 மணிவரை நேரடியாக ஒலிபரப்புச் செய்தது. (ஒ)

## பாராட்டு விழா

குருநகர்,ஒக்.11

சமாதான நீதிவான்களாக அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட எஸ்.ஜீ.கணேசவேல், எஸ்.கனகசுந்தரம் ஆகியோர்களுக்கு யாழ்.ஓட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பாராட்டுவிழா ஒன்றை நடத்தவுள்ளது.

மேற்படி விழா அன்று மாலை 4.00 மணியளவில் நிலையத் தலைவர் செ.பிரசாத் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-51)

## மின்சாரசபை சீர்திருத்தச் சட்டம் ஒருவாறு நிறைவேற்றப்பட்டது!

எதிர்க்கட்சியினரின் பல்வேறு எதிர்ப்புக்களுக்கும் விமர்சனங்களுக்கும் மத்தியில் மின்சார சீர்திருத்தச் சட்டமூலம் 108 வாக்குகளைப் பெற்று 25 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 83 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், எதிர்க்கட்சி உறுப்பினர்களான ரிச்சர்ட் பத்திரன, பௌஸி உட்பட இரு பக்கத்திலும் 33 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வுக்குச் சமுகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கோரிக்கையின்பேரில் மின்சார சீர்திருத்தச்சட்டமூலம் மீதான வாக்கெடுப்பு பெயர் கூறி பதிவு செய்யப்பட்டது.

வாக்கெடுப்பு நடத்தப்பட்ட வேளையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எவருமே சபையில் இருக்கவில்லை. எனினும், வாக்கெடுப்பு நிறைவு பெறும் வேளையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுடன் பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவுத் சபைக்குள் பிரவேசித்தார். இவர்கள் இருவரும் மேற்படி சட்டவரைவுக்கு ஆதரவாகத் தமது வாக்குகளைப் பதிவுசெய்து கொண்டனர். ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த வேறு உறுப்பினர்கள் எவரும் சபையில் இருக்கவில்லை.

தமிழ்தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் எம்.பி.சித்தார்த்தன் ஆகியோர் சமுகமளிக்கவில்லை. (ஒ)

## காஞ்சிரங்குடா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கற்களை எறிந்தனர் ரயர்களை எரித்தனர் சுடுகலன்களினால் சுட்டனர். அதிரடிப் படையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் இறப்பர் தோட்டாக்களையும் பயன்படுத்தினர். கடைசியாக நிஜத் தோட்டாக்களைப் பயன்படுத்தினர்.

கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்பாளர்கள் இரவு 8 மணிக்கு முன்னர் முகாமுக்கு வந்தனர். முகாமுக்குள் மூன்று சடலங்களையும் முகாம் வேலிக்கு ஐந்து மீற்றர் தள்ளி ஒரு சடலத்தையும் அவர்கள் கண்டனர். அந்த நால்வரும் சரியாக அவர்களின் சடலங்கள் காணப்பட்ட இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்பதை கண்காணிப்பாளர்களின் அவதானங்கள் சுட்டிக்காட்டின.

ஆரம்ப சோதனைகளின் பின்னர் உயிரிழந்த ஒருவர் அணிந்த உடைகளின் அடிப்படையில் அவர் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக இருக்கலாம் எனக் கருதப்பட்டது.

ஆனால், அவர் அணிந்திருந்த உடை புலிகள் உறுப்பினர்கள் வழமையாக அணியும் உடையல்ல. அதுபோன்ற தோற்றத்தை ஒத்தது மட்டுமே என்பதால் அவர் புலி உறுப்பினர் அல்லர். சிவிலியனே என்று இப்போது கருதப்படுகின்றது.

முகாமுக்கு வெளியே தீயிடப்படக்கூடிய பொருள்கள் அப்போதும் எரிந்துகொண்டிருப்பதையும் முகாமுக்குள் ரயர்கள் எரிந்துகொண்டிருப்பதையும் கண்காணிப்பாளர்கள் அவதானித்தனர்.

முகாமின் தொலைத்தொடர்பு 'அன்ரனாவும்' விளக்குகளும் சேதமாக்கப்பட்டுள்ளன; முகாமுக்குள் இருந்த வீடுகளின் ஜன்னல்கள் உடைக்கப்பட்டுள்ளன.

முகாமுக்கு வெளியே மைதானத்தில் தாக்குதல் துப்பாக்கி ஒன்று கிடக்கக்காணப்பட்டது.

முகாம் மீதான தாக்குதலின் போதும், பின்னரும் ஏழு பொதுமக்கள் கொல்லப்பட்டிருப்பதை அம்பாறை மாவட்ட கண்காணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அத்தோடு, காயமுற்ற 14பேர் கல்முனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கல்முனை வைத்தியசாலையின் டாக்டர்களின் கூற்றுப்படி, அவர்களில் ஏழு பேர் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகியுள்ளனர். ஆனால், அனைவரும் இரண்டு அல்லது மூன்று நாள்கள் வைத்தியசாலையில் இருந்து அனுப்பப்பட்டு விடுவார்கள்.

இன்று (வியாழக்கிழமை) கிழக்குக் கரையோரப்பிரதேசத்தில் அடையாளங்காணப்படாத மக்கள் குழுவில் உறுப்பினர்கள் எரியும் ரயர்களை போட்டு வீதித்தடைகளை ஏற்படுத்தியுள்ளனர் நிலைமை மிகவும் பதற்றமாகவுள்ளது. ஆனால், வன்செயல்கள் இல்லை.

தாக்குதல் நடத்திய கூட்டத்தில் புலிகளின் ரூபுஸ் குளம் முகாமைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருந்ததாக அதிரடிப்படை முகாமின் கட்டளை அதிகாரி கூறியிருந்தார்.

ஆனால், அதற்கான ஆதாரம் ஏதும் இதுவரை கண்காணிப்புக் குழுவுக்குக் கிட்டவில்லை. அத்தோடு இத்தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகளின் தலைமை முன்னரே அறிந்திருந்தது என்பதை சுட்டிக்காட்டவும் எதுவும் இல்லை.

"சோகம் தரக்கூடிய உயிரிழப்புக்களை ஏற்படுத்திய பரிதாப நிகழ்வு இது" - என்று கண்காணிப்புக்குத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் புருகோவிட் கூறினார்.

"கட்டுப்பாடற்ற ஆர்பாட்டம் காரணமாக மக்கள் இன்று தமது அன்புக்குரியவர்களின் இழப்புக் குறித்து வேதனைப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. நம்பிக்கையும் நல்லிணக்கமும் ஒருநாள் இரவில் அச்சமும் எதிர்வு கூறமுடியாத நிலையுமாக மாறிவிட்டன.

"இந்த நெருக்கடியான நேரத்தில் கட்டுப்பாட்டுடனும் திடசித்தத்துடனும் சமாதானத்துக்கான உறுதியோடும் மகக்ள் இருக்கவேண்டிய தேவையை இச்சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

"சமாதானத்துக்கும் நல்ல எதிர்காலத்துக்குமாக நாம் ஆற்றக் கூடியதை செய்ய முயற்சிப்பதன் மூலம் இத்தகைய இழப்புக்களைத் தாங்கிக் கொள்வோம் என்பதைவெளிப்படுத்த ஒவ்வொருவரும் முன்வரவேண்டும்.

"இது உண்மையில் பரிதாபமானதுதான். ஆனால், பிணக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர் மட்டுமல்லாமல் இந்த நாட்டில் உள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதில் பொறுப்பு உண்டு என்பதையும் இது உணர்த்துகின்றது" - என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சம்பவங்கள் காரணமாக கண்காணிப்புக்குழுத் தலைவர் தொடர்ந்து அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளி, சனிக்கிழமைகளில் இருப்பார்.

- இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பட்ஜெட் விவாத காலம் நீடிப்பு

வரவு - செலவுத் திட்ட விவாதத்துக்கான காலத்தை அமைச்சரவை நீடித்துள்ளது. அடுத்தமாதம் 6ஆம் திகதி வரவு - செலவுத் திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அடுத்த மாதம் 14ஆம் திகதி இடம்பெறுவதுடன் மூன்றாது வாசிப்பு மதான வாக்கெடுப்பு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ஒ-10)


பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்
சிங்களம் புதிய வகுப்பு
எழுத, பேச, வாசிக்க, உரையாட
குறுகிய காலத்தில் இலகு வழியில் கற்றுக்கொள்ள
புதிய பிரிவு ஆரம்பம்
12.10.2002
சனி - 3.00 p.m (ப.நே)
பிரபல கொழும்பு ஆசிரியர்
BY : Mr.மல்வான
(9312)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கௌசலாதேவி கதிர்.தணிகாசலம்

சந்தை வீதி, உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி கௌசலாதேவி கதிர். தணிகாசலம் அவர்கள் நேற்று(10.10.2002) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் 'கலைஞானகேசரி, சைவப் புலவர், ஞானபண்டித ஆய்வரசு', கதிரவேலு தணிகாசலம்J.P. அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.நாகலிங்கம் - அழகம்மா தம்பதிகளின் மகளும், பரராசசிங்கம், நவரத்தினம், ஞானசேகரம், திருமதி சிவயோகம் கனகரத்தினம், திருமதி புஸ்பராசம் செல்லத்தம்பி மற்றும் இராசலட்சுமி இரத்தினம், ஆனந்தராசா (ஓய்வுபெற்ற வீடமைப்புத் திணைக்கள நிர்வாக அலுவலர்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் நேற்று (10.10.2002) வியாழக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.விமலராசா

(C/24170)

### நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.16, தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை நேற்று (10.10.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனாரும், காலஞ்சென்ற விசுவநாதர் - குஞ்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் புவனேஸ்வரி, சண்முகநாதன், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) மற்றும் சந்தனராசா (சுவிஸ்) கிருஷ்ணகுமாரி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன், பத்மராணி, கிளி (ஜேர்மனி), கௌசல்யா (சுவிஸ்), கமலேந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கந்தையா (கனடா) மற்றும் நாகராசா (கிளிநொச்சி), இலகுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தவமணி (கனடா) மற்றும் ஜெயலட்சுமி (கிளிநொச்சி), இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கதிரேசன் கொமினிகேசன்*
*330, கே.கே.எஸ். றோட்,*
*யாழ்ப்பாணம்.*

(9317)

தகவல்:
ப.விஜயகுமார் (விஜி)
(பேரன்)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

2002ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 123 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த பாஷையூரைச் சேர்ந்த மாணவி
ரெ.மேரிதர்ஷனா
அவர்களை மனம் மிக மகிழ்ந்து பாராட்டுவதுடன் அவர் மேலும் கல்வியிலும் வாழ்விலும் சிறப்புற்று வாழ வாழ்த்துகிறோம்.
பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகம்.
(9314)



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அப்புத்துரை தம்பிராஜா
பிறப்பு : 20.05.1956 இறப்பு : 03.10.2000
எங்கள் குடும்பத்தின் ஒளி மறைந்தது – எம்
எல்லோர் இதயத்திலும் இருள் பிறந்தது
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தன!
ஆனாலும் எம் சோகம் ஓடவில்லையே?
எத்தனை வருடங்கள் உருண்டோடிப் போனாலும்,
எப்போதும் போகாது உம்முகம் எம்மை விட்டு
உழைப்பினால் உயர்ந்து நின்றீர் – உம்
உயர்வினால் நாம் நிமிர்ந்தோம்...
இடை வழியில் கதை முடித்தீர்!
எம் இதயங்களைத் தவிக்க வைத்தீர்.
தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு. இணுவில்.
(9315)
- குடும்பத்தினர்.



நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம். காவேரி நடிப்பில்
காசி (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.00 (புதியநேரம்)
(C-24190)



ராஜா யாழ்ப்பாணம்.
மனோஜ், முரளி, பிரதியுக்ஷா நடிப்பில்
இந்திய ஜனாதிபதி விருதுபெற்ற
கடல்பூக்கள்
10.30, 2.30, 6.30
(C-24065)



நாகம்ஸ் சுன்னாகம்
13.10.02 ஞாயிறுவரை
M.G.R, ராதாசலுஜா நம்பியார் நடிக்க
இதயக்கனி (சீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (ப.நே.)
(9280)

## வடக்கு - கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான முயற்சிகளுக்கு முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கி, தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்திவரும் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ்மக்கள்மீது ஸ்ரீலங்கா படையினர் மேசமான படுகொலை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமையானது இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வைக் காணும் சமாதான நடவடிக்கைகளை திட்டமிட்டுக் குழப்பும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட முனைந்துள்ளனரோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது.

அம்பாறையில் இடம்பெற்ற தமிழ மக்கள் படுகொலை காரணமாக வடக்கு - கிழக்கில் வாழும் முழுத் தமிழ் மக்களுமே கோபத்திற்கும் மனகொந்தளிப்புக்கும் உள்ளாகியுள்ளனர். எனவே, இக்கொலையில் ஈடுபட்ட படையினர்மீது ரணில் விக்கிரமசிங்கவின் புதிய அரசானது உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தமிழ் மக்கள தற்போதைய சமாதான முயற்சிகளில நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் வைப்பதற்கு விரைவான - காத்திரமான - நடவடிக்கைகளை மேற்கொளவது அவசியம் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

அம்பாறை காஞ்சிரங்குடாப் பகுதியில் ஜனநாயக ரீதியில் தமது உரிமைகளுக்குக் குரல்கொடுத்த அப்பாவித் தமிழ்மக்கள்மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அநியாயமாகப் பல உயிர்களைக் கொன்றொழித்தும பலரை படுகாயங்களுக்கு உள்ளாக்கிய ஸ்ரீலங்கா அதிரடிப்படையினரின் மிலேச்சத்தனமான நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இந்த ஜனநாயக ரீதியிலான வெகுஜனப் போராட்டத்தில் உயிர்நீத்த மக்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துவதோடு நாளை சனிக்கிழமை வடக்கு-கிழக்கு முழுவதும் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

- என்றுள்ளது.

(ஒ-10-ரி)

## பாலசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலணி அமைக்கப்படுவதன் முக்கிய நோக்கமாகும். முதல் நிலை பிரச்சினைகள் பற்றி ஆராயப்பட்டு அவற்றைத் தீர்க்கும் வழிமுறைகளும் தீர்மானிக்கப்படவேண்டும். அதற்கேறப அரச திணைக்களங்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும.

இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

- இவ்வாறு அவர் கூறினார். (ஒ)

## திருக்கோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்குழுவில் சம்பவத்துடன் தொடர்புடைய சகல தரப்பினரதும் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படுவர் என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விசாரணைக் குழுவிற்கு மேலதிகமாக நீதிமன்ற விசாரணையும நடைபெறும். இச்சம்பவம் தொடர்பான கண்காணிப்புக் குழுவின் அறிக்கையை துரிதகதியில் வழங்குமாறும் அரசு கேட்டுள்ளது.

(ஒ-10)

# டிராக்டரைக் கேட்டார்கள்; கொடுக்கவில்லை மண்வெட்டிப் பிடியால் தாக்கினார்கள்!

### புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் விஸ்வநாதன் விவரிப்பு

காரைதீவு,ஒக்.11

திருக்கோவிலிலிருந்து டிராக்டரில் நாம் சென்றுகொண்டிருந்தோம். இடையில் காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படை முகாம் உள்ளது.

அதன் முன்னால் செல்லும்போது நாம் மறிக்கப்பட்டோம். நான் இறங்கி "என்ன விசயம்?" என்று கேட்டேன். டிராக்டரைத் தரும்படி அந்தச் சிப்பாய் கேட்டார். "தேவைக்கு டிராக்டரைக் கொண்டுபோவதாகக் கூறியும் அவர் விட்டபாடில்லை, வாக்குவாதப் பட்டார். அப்போது அவர்கள் என்னை சரமாரியாகத் தாக்கினார்கள்."

- இவ்வாறு காஞ்சிரங்குடா சம்பவத்தில் தாக்குதலுக்கு இலக்கான விடுதலைப் புலிகளின் பொத்துவில் - கோமாரிப் பிரதேச பொறுப்பாளர் விஸ்வநாதன் கூறினார்.

தான் விடுதலைப் புலிப் போராளி என்று கூறியும் தாக்கப்பட்டதாக அவர் கூறினார்.

அவருடன் கிறிஸ்துராஜா என்ற போராளியும் மண்வெட்டிப் பிடியால் தாக்கப்பட்டார். இவர்கள் காலை 10.30 மணியளவில் திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுச்சென்றதாக வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஒ)

## மோதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டது.

பஸ் சாரதிகள் நடத்துநர்களுக்கும் ஓட்டோ, மினி பஸ்சாரதிகளுக்கும் இடையே அடிக்கடி இடம்பெற்றுவரும் மோதல்களைத் தடுக்கும் வழிவகைகளையும் இக்குழுவினர் ஆராய்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## 2ஆம் லெப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச் சுடரினை விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்விழி ஏற்றினார்.

தேசியக் கொடியை மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் தமிழரசி ஏற்றினார். நினைவுச் சின்னத்தை மாவீரர் மேஜர் கலைமகளின் தாயார் இராமலிங்கம் மகேஸ்வரி திறந்து வைத்தார்.

ஈகச்சுடரினை புலிகளின் பிரமுகர் பாப்பா, வலிகாமம் கோட்டபொறுப்பாளர் தமிழ்மறவன் ஆகியோர் ஏற்றினர்.

திருவுருவப் படத்துக்கு விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை மலர்மாலை அணிவித்தார்.

நிகழ்வில் புலிகளின் பிரமுகர் பாப்பா உட்பட பலரும் நினைவுரை நிகழ்த்தினர்.

(ஒ-எ-72)

# ஜனாதிபதி-பிரதமர் சந்தித்துப் பேச்சு!

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தாய்லாந்து சமாதானப் பேச்சுக்களின் முன்னரும் பேச்சுக்களின் பின்னரும் அவ்வப்போது அவை தொடர்பாக ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்த இச்சந்திப்பின்போது பிரதமர் இணக்கம் தெரிவித்தார் என அறிவிக்கப்பட்டது.

அரசின் பொருளாதார அபிவிருத்திக் கொள்கை விளக்கமொன்றை ஜனாதிபதியிடம் பிரதமர் கையளித்தார். இதனைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, அதனை வாசித்த பின்னர் தனது கருத்தைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை, பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு, கிழக்கு மாகாண பாதுகாப்பு போன்ற விடயங்களும் அங்கு ஆராயப்பட்டன.

பிரதமருடன் அமைச்சர்கள் திலக் மாரப்பன, மிலிந்த மொறகொட ஆகியோரும் ஜனாதிபதியுடன் அவரது வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரும் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

சமாதானப் பேச்சுக்களை-குறிப்பாக தீர்வுக்கான விடயங்களை - விரைவாக நடத்தி முடிக்கும்படி இப்பேச்சுக்களின் போது ஜனாதிபதி வற்புறுத்தினார் என ஒரு தகவல் தெரிவித்தது. (ஒ-10-12-ரி)


**வாழ்த்துகின்றோம்**



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின்
உபபீடாதிபதி
(கல்வியும் தர மேம்பாடும்)
**பாலசுப்பிரமணியம் தனபாலன்**
அவர்கள்
கல்வியியலில் முதுதத்துவமாணி
(M.Phil. in Education)

பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்று, நாளை நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் பங்குகொள்ளும் எம் பேராசானுக்கு உளமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யா/விக்ரோறியாக் கல்லூரியின் மைந்தர்கள்,
பேராசானிடம் கற்றுயர்ந்த முன்னாள்
யா/கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள்,
பட்டப்பின் கல்வி டிப்ளோமா தே.க.நி.
ஆசிரிய மாணவர்கள்.
(9236)

விவசாயிகளே!

உங்களுக்குத் தேவையான சகலவிதமான உரவகைகளுக்கும் Hollandஇல் இருந்து தருவிக்கப்பட்ட டிசிறி வகை விதை உருளைக் கிழங்குகளுக்கும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய இடம்:

**ML & Co.**
இல.235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222-2506.
(9244)

வட பகுதி, மாணவர்களுக்கு
2003 இல் IIS நிறுவனம் தரும் பரிசு
விபரம் 15.10.2002 உதயனில்

**BITSMANS**
கல்வி நிறுவனம் மானிப்பாய்
A/L 2004 பௌதிகம்
அதிர்வுகளும் அலைகளும்
ஆசிரியர்:
திரு.ஜெயசீலன் B.Sc.(Hons)
ஆரம்பம்: 13.10.2002 Sun. 3.30
(9201)

புதிய கணனி வகுப்புகள்
Dip. in Ms Office
ஆரம்பம்: 12.10.2002
மாலை 5 மணி
**UNIVAC**
College of Computer Information Technology
SITHANKERNY
(9250)

**மலிவு விலையில்**
பாவித்த கணனிகள் PII
266mhz, 64mb Ram, HDD3GB
14" கலர் மொனிட்டர்
with Multimedia
என்பன மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்பு:-
'மணியகிரி'
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(9241)

**PHYSICS**
திரு.சிவலிங்கம் B.Sc.
A/L 2004
அலைகளும் அதிர்வுகளும்
திங்கள், வெள்ளி 6 - 7 p.m.
ஆரம்பம் 11.10.2002
**திகழ் கல்வி நிறுவனம்**
K.K.S. வீதி, இணுவில்.
(9267)

**நிரு கல்வி நிலையம்**
கோண்டாவில்
பொருளியல் A/L 2004
By: திரு.சணி
தேசிய வருமானம்
ஆரம்பம்:
13.10.2002 சனி, 12 மணி.
(9269)


## இரங்கற் திருப்பலி

### திருமதி அந்தோனியா சாமிநாதர்

(முன்னாள் ஆசிரியை, யா/திருக்குடும்ப கன்னியர்மடம் - முன்னாள் பழைய மாணவர் சங்கத் தலைவி, யா.தி.க.மடம்)

இவரது ஆன்மசாந்திக்காக நாளை (12.10.2002) சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட சிற்றாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பழைய மாணவர்கள், கன்னியர்கள், ஆசிரியர்கள் அனைவரையும இதிற் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம்.

(9263)

## மரண அறிவித்தல்

### திருமதி மரியாம்பிள்ளை அன்னம்மா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது 128, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மரியாம்பிள்ளை அன்னம்மா கடந்த (08.10.2002) செவ்வாய்க்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மரியாம்பிள்ளையின் (சூசைபிள்ளை) அன்பு மனைவியும், பீற்றர் வில்பிறட், காலஞ்சென்றவர்களான றீற்றம்மா, போல் குலசிங்கம் மற்றும் வண.பிதா பி.எம்.இம்மனுவேல் (பங்குத்தந்தை, பாண்டியன்தாழ்வு), அருள்நாதன், வினிபிறட் சிதம்பரநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி றெஜினா பீற்றர் (இளைப்பாறிய ஆசிரியை), பஸ்ரியாம்பிள்ளை, மரியாம்பிள்ளை, திருமதி மணி குலசிங்கம், திருமதி மரியகொறற்றி அருள்நாதன் (இந்தியா), சிதம்பரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அருட்சகோதரி செலின் அவர்களின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.10.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக நாரந்தனை சம்பேதுரு சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தை பி.எம்.இம்மனுவேல் (மகன்)
128, மவுண்கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.
(9241)


**SWISS PRASAN VIDEO - BRANCH - 02**

சுவிஸில் புகழ்பெற்ற SWISS PRASAN VIDEO ஸ்தாபனத்தினர்
தமது கிளை - 02ஐ யாழ்.மண்ணில் 12.10.2002 இல்
கோலாகலமாக ஆரம்பிக்கின்றனர் என்பதை மனமகிழ்வுடன் அறியத்தருகின்றார்கள்.
யாழ்.மக்களே....! உங்கள் நிகழ்வுகளை உலகின் தரம்வாய்ந்த நவீன தொழில்நுட்பத்தினூடாகப் பதிந்து, என்றும் காலத்தால் அழியாத நினைவில் வைத்திருங்கள்.
எமது முகவரி: சுவிஸ் பிரசன் விடியோ - கிளை - 02, இல.252, யாழ்.வீதி, மானிப்பாய். T.P.: 0777-879813
(9299)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.